மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 4 | 15 - 12 - 55 | இதழ் 16

மருத்துவப்பணியில் சரித்திரம் கண்ட மங்கை

பிளாரன்சு நைட்டிங்கேல்

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

'மன்றம்' பொங்கல் மலர்

1956 சனவரித் திங்களில்

பொங்கல் மலர் புதுமணத்தோடு பூக்கும்!

●

அறிவால் - ஆராய்ச்சியால் - அழகால்
சிறந்த
சொற்செறிவும் - பொருளாழமும்
கொண்ட
கதைகள் - கவிதைகள் - கட்டுரைகள்
மலரில் மணங்கமழும்!

●

தலைசிறந்த
கலைஞர்கள் - கவிஞர்கள் - அறிஞர்கள்
எழுதுகிறார்கள்!

●

மூவண்ண முகப்பு அட்டையோடு 100 பக்கங்களில்
மிளிரும்!

விலை ரூபாய் ஒன்று

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

15 - 12 - 55 வியாழக்கிழமை

புயலும் வெள்ளமும்

மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில் ஆக்கக் கூத்தை அடிக்கடி நடத்திக்காட்டிவரும் இயற்கை, சிலவேளைகளில் மக்கள் மருட்சி கொள்ளும் தன்மையில் அழிவுக்கூத்தையும் நடத்திக் காட்டிவிடுகிறது! தமிழக மக்கள் அளவிடமுடியாத பெருந்துக்கத்தையும், அகற்றமுடியாத பெருந் துயரத்தையும் பெறும்வகையில், இயற்கை, தன் அழிவுக் கூத்து ஒன்றைப் பதினைந்து நாட்களுக்கு முன்பு நடத்திக்காட்டியிருக்கிறது!

கட்டுக்கடங்காப் பெருவெள்ளமும், சூறுவளிப்பெரும்புயலும் தஞ்சை — திருச்சி — மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் கடற்கரையோரப் பகுதிகளைச் சூறையாடியிருக்கும் தன்மையை நினைக்க நினைக்க நெஞ்சு பதைக்கிறது. தமிழகம் இதுவரையில் கண்டிராத அளவுக்கு கேட்டிராத அளவுக்கு இயற்கையின் விளைவால் கொடுமைகள் நிகழ்ந்திருக்கின்றன. குறிப்பாகச் சீர்காழி, காரைக்கால், நாகப்பட்டினம், அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, மேலூர், திருவாடாதனை, பரமக்குடி ஆகிய பகுதிகள் வெள்ளத்திற்கும் புயலுக்கும் ஆளாகிப் பேரழிவையும் பேரிழப்பையும் பெற்றிருக்கின்றன. ஏறத்தாழ ஆயிரம் பேர்கள் இந்தச் சூறையாடலுக்கு இரையாகியிருப்பார்கள் என்று கணக்கிடப்படுகிறது. ஆட்டினமும், மாட்டினமும் பதினாயிரக்கணக்கில் மடிந்திருக்கின்றன. பதினாயிரக்கணக்கான வீடுகள் பெரியவையும், சிறியவையும், குடிசைகளும் சேர்ந்து இடிந்தும்—சரிந்தும் போயிருக்கின்றன. பதினாயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பயிர்ப் பச்சைகளோடு பாழாகியிருக்கின்றன. மரங்கள் இலட்சக்கணக்கில் வேரோடு சாய்ந்திருக்கின்றன. கோடிக்கணக்கான விலைமதிப்புள்ள பொருள்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இலட்சக்கணக்கானவர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றிப், படுக்கப் பாயின்றித் திக்கற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். வேதாரண்யம் போன்ற இடங்களில் கடலே எழும்பி ஊருக்குள் புகுந்திருக்கின்றது. பல சிற்றூர்கள் இன்னமும் வெள்ளத்தில் மிதந்துகொண்டிருக்கின்றன. பல இடங்களிலும் சேர்த்து வைத்திருந்த நெல்லும், குவித்து வைத்திருந்த உப்பும் வெள்ளத்தால் அடித்துக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன. இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாகி அவதியுறும் மக்களைக் கைதூக்கிவிடுவது எவ்வாறு என்று எண்ணும்போதுதான் திகைப்பும், திகிலும் ஏற்படுகின்றன. சிறிது வளத்தோடும் வசதியோடும் இருக்கும் பிறமக்களும், சென்னை அரசும், இந்தியப் பேரரசும்தான் முன்வந்து அவதியுறும் மக்களைக் காப்பாற்ற முயலவேண்டும். இல்லையென்றால், 'பக்திநெறி'யினர் அடிக்கடிக் கூப்பிட்டுப் பார்க்கும் 'ஆண்டவனா' வரப்போகிறார்?

புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இடங்களில் சிவன்கோயில்களும், விட்ணுகோயில்களும், மாதாகோயில்களும், மசூதிகளும் இருக்கத்தான் செய்தன; அங்கெல்லாம் தொடர்ந்து தொழுகைகள் நடைபெறத்தான் செய்தன; வேதங்கள் ஓதப்படத்தான் செய்தன; பசனைகள் நடைபெறத்தான் செய்தன. இவையெல்லாம் இருந்தும்கூட வெள்ளமும் புயலும் ஏற்பட்டேயிருக்கின்றன. அந்த வெள்ளமும் புயலும் அவைகளையும் சேர்த்துதான் பாழ்படுத்தியிருக்கின்றன. பக்தியுள்ளவர்—பக்தி குறைந்தவர் — பக்தி இல்லாதவர், நல்லவர்—தீயவர் ஆகிய எல்லா வகையினரும்தான் ஒருசேர பாதிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே இந்தக் கொடுமைகளைக் கூடுமானவரையில் நீக்கவும், கொடுமைகளுக்கு உள்ளானவர்களைக் கூடுமானவரையில் மீட்கவும் நம்மை நாமேதான் நம்பித் தீரவேண்டியிருக்கிறது.

சிறுதுளிப் பெருவெள்ளம் என்பதுபோல், குறிப்பாகத் தமிழகத்திலுள்ள மக்களும், பொதுவாகப் பிற பகுதிகளிலுள்ள மக்களும் தங்களாலான பணவுதவி—உணவுதவி—உடையுதவி–உறையுளுதவி பிறபொருளுதவி செய்ய முன்வரவேண்டும். இந்தப் பணிகளைச் செய்ய பல்வேறு அமைப்புகளும் முன்வரவேண்டும். அழிவின் அளவைப் பார்க்கும்போது, பொதுமக்கள் தரும் நன்கொடையால்

'மன்றம்' பொங்கல் மலர்

1956 சனவரித் திங்களில்

பொங்கல் மலர் புதுமணத்தோடு பூக்கும்!

●

அறிவால் - ஆராய்ச்சியால் - அழகால்

சிறந்த

சொற்செறிவும் - பொருளாழமும்

கொண்ட

கதைகள் - கவிதைகள் - கட்டுரைகள்

மலரில் மணங்கமழும்!

●

தலைசிறந்த

கலைஞர்கள் - கவிஞர்கள் - அறிஞர்கள்

எழுதுகிறார்கள்!

●

மூவண்ண முகப்பு அட்டையோடு 100 பக்கங்களில்

மிளிரும்!

விலை ரூபாய் ஒன்று

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15 - 12 - 55 வியாழக்கிழமை

புயலும் வெள்ளமும்

மக்கள் மகிழ்ச்சியுறும் வகையில் ஆக்கக் கூத்தை அடிக்கடி நடத்திக்காட்டிவரும் இயற்கை, சிலவேளைகளில் மக்கள் மருட்சி கொள்ளும் தன்மையில் அழிவுக்கூத்தையும் நடத்திக் காட்டிவிடுகிறது! தமிழக மக்கள் அளவிடமுடியாத பெருந்துக்கத்தையும், அகற்றமுடியாத பெருந் துயரத்தையும் பெறும்வகையில், இயற்கை, தன் அழிவுக் கூத்து ஒன்றைப் பதினைந்து நாட்களுக்கு முன்பு நடத்திக்காட்டியிருக்கிறது!

கட்டுக்கடங்காப் பெருவெள்ளமும், சூறைவளிப்பெரும்புயலும் தஞ்சை — திருச்சி — மதுரை—இராமனுதபுரம் ஆகிய மாவட்டங்களின் கடற்கரையோரப் பகுதிகளைச் சூறையாடியிருக்கும் தன்மையை நினைக்க நினைக்க நெஞ்சு பதைக்கிறது. தமிழகம் இதுவரையில் கண்டிராத அளவுக்கு கேட்டிராத அளவுக்கு இயற்கையின் விளைவால் கொடுமைகள் நிகழ்ந்திருக்கின்றன. குறிப்பாகச் சீர்காழி, காரைக்கால், நாகப்பட்டினம், அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, காரைக்குடி, மேலூர், திருவாடாதனை, பரமக்குடி ஆகிய பகுதிகள் வெள்ளத்திற்கும் புயலுக்கும் ஆளாகிப் பேரழிவையும் பேரிழப்பையும் பெற்றிருக்கின்றன. ஏறத்தாழ ஆயிரம் பேர்கள் இந்தச் சூறையாடலுக்கு இரையாகியிருப்பார்கள் என்று கணக்கிடப்படுகிறது. ஆட்டினமும், மாட்டினமும் பதினுயிரக்கணக்கில் மடிந்திருக்கின்றன. பதினுயிரக்கணக்கான வீடுகள் பெரியவையும், சிறியவையும், குடிசைகளும் சேர்ந்து இடிந்தும்—சரிந்தும் போயிருக்கின்றன. பதினுயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பயிர்ப் பச்சைகளோடு பாழாகியிருக்கின்றன. மரங்கள் இலட்சக்கணக்கில் வேரோடு சாய்ந்திருக்கின்றன. கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள பொருள்கள் அழிக்கப்பட்டிருக்
கின்றன. இலட்சக்கணக்கானவர்கள்
உணவின்றி, உடுக்க உடையின்றி,
இடமின்றிப், படுக்கப் பாயின்றித்
களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.
யம் போன்ற இடங்களில் கடலே
ஊருக்குள் புகுந்திருக்கின்றது. பல
கள் இன்னமும் வெள்ளத்தில் மிதந்து
டிருக்கின்றன. பல இடங்களிலும்
வைத்திருந்த நெல்லும், குவித்து
திருந்த உப்பும் வெள்ளத்தால்
கொண்டுபோகப்பட்டிருக்கின்றன. இ
கொடுமைகளுக்கு ஆளாகி அவதியுறும்
ளைக் கைதூக்கிவிடுவது எவ்வாறு
எண்ணும்போதுதான் திகைப்பும்,
ஏற்படுகின்றன. சிறிது வளத்தோடும்
யோடும் இருக்கும் பிறமக்களும்,
அரசும், இந்தியப் பேரரசும்தான் முன்
அவதியுறும் மக்களைக் காப்பாற்ற
வேண்டும். இல்லையென்றால், 'பக்
யினர் அடிக்கடிக் கூப்பிட்டுப் பார்க்கும் '
டவனு' வரப்போகிறார்?

புயலாலும், வெள்ளத்தாலும் பா
பட்ட இடங்களில் சிவன்கோயில்
விட்ணுகோயில்களும், மாதாகோயில்
மசூதிகளும் இருக்கத்தான் செய்தன;
கெல்லாம் தொடர்ந்து தொழுகைகள்
பெறத்தான் செய்தன; வேதங்கள் ஓத
தான் செய்தன; பசனைகள் நடைபெற
செய்தன. இவையெல்லாம் இருந்து
வெள்ளமும் புயலும் ஏற்பட்
அந்த வெள்ளமும் புயலும் அ
சேர்த்துதான் பாழ்படுத்தியிருக்கின்
பக்தியுள்ளவர்—பக்தி குறைந்தவர் —
இல்லாதவர், நல்லவர்—தீயவர் ஆகிய
வகையினரும்தான் ஒருசேர பாதிக்கப்பட்
கின்றனர். எனவே இந்தக் கொடுமை
கூடுமானவரையில் நீக்கவும், கொடுமை
உள்ளானவர்களைக் கூடுமானவரையில்
வும் நம்மை நாமேதான் நம்பித் தீர
யிருக்கிறது.

சிறுதுளிப் பெருவெள்ளம் என்பது
குறிப்பாகத் தமிழகத்திலுள்ள
பொதுவாகப் பிற பகுதிகளிலுள்ள ம
தங்களாலான பணவுதவி—உணவு
உடையுதவி-உறையுளுதவி பிறபொரு
செய்ய முன்வரவேண்டும். இந்தப் பணி
செய்ய பல்வேறு அமைப்புகளும்
வேண்டும். அழிவின் அளவைப் பார்
போது, பொதுமக்கள் தரும் நன்கொடை

மட்டுமே நன்னிலை கண்டுவிட்முடியாது என்பதை யாவரும் உணர்வர். அவதியுறுவோரைக் கைதூக்கிவிடும் பொறுப்பை சென்னை அரசும்—இந்தியப் பேரரசுந்தான் தாங்க வேண்டும்—தாங்கமுடியும்.

வட இந்தியாவில் வெள்ளக்கொடுமைகள் ஏற்பட்டால், நிவாரணத்திற்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கும் இந்தியப் பேரரசு, தென்னாட்டுப் புயல் கொடுமை நிவாரணத்தைப் பொறுத்து எவ்வளவு அக்கரை காட்டப்போகிறது என்பது போகப்போகத் தெரியும். இந்தியப் பேரரசு தன்னுடைய பொறுப்பை இப்பொழுதும் தட்டிக்கழிக்கிறது என்று ஏற்பட்டால், அதுகுறித்து நாம் வியப்படையமாட்டோம். ஏன் எனில் இந்தியப் பேரரசின் தன்மையை நாம் நெடுநாட்களாக நன்கு உணர்வோம். தென்னாட்டுக் காங்கிரசு ஆட்சியாளர்க்கு அந்த நிலைமை சிறிது விழிப்புணர்ச்சியைத் தருமேயானால், அதுவே பெரியதொரு செயலாகும். ஆனால் அப்படியும் விழிப்புணர்ச்சி பெறுவார்களா என்பது ஐயப்பாடே.

திராவிட முன்னேற்றக் கழகம் புயல் கொடுமை நிவாரணத்தைப் பொறுத்துத் தன்னாலான கடமைகளைச் செய்ய முன்வந்துள்ளது. கழகம் தன்னுடைய தொண்டர்களிடமிருந்து சல்லிக்காசுகளாகச் சேர்த்துவைத்திருக்கும் நிதியிலிருந்து ரூபாய் ஆயிரம் புயல் நிவாரண நிதிக்கு அளித்துள்ளது. நிவாரண வேலைகளில் ஈடுபடும்படியாகக் கிளைக் கழகங்களையும், கிளைக்கழகத் தோழர்களையும் கேட்டுக்கொண்டுள்ளது. ஆங்காங்குள்ள மாவட்டக் கழகச் செயலாளர்களும், சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைச் செயலாளர்களும், பிறகழகத் தோழர்களும் பணம்—உணவு—உடை—உறையுள் ஆகியவற்றைத் திரட்டித் தரும் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள செய்தி கேட்டு நாம் பெருமகிழ்ச்சியுறுகிறோம். இத்தகைய நிவாரண வேலைகளைத் தீவிரமாகவும், தொடர்ந்தும் செய்யும்படி கழகத் தோழர்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். நிவாரண வேலைகளில் பிற கட்சிகளோடும், அமைப்புக்களோடும் இணைந்து நின்றும் பணியாற்றும்படி கழகத் தோழர்கள் தலைமைக்கழகத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. முன்பு தஞ்சை—திருச்சி மாவட்டங்களில் புயல்வீசிப் பெருங்கேடுகள் விளைவித்தபோது, நிவாரண நிதியாக ரூ. 25,000 திரட்டித்தந்தது தி. மு. கழகம். இது வேறு எந்த அரசியல் அமைப்பும் அப்பொழுது செய்யாத செயல் ஆகும். அத்தகைய வரலாற்றுப் பெருமை கொண்ட தி. மு. கழகம் இப்பொழுதும் தன் கிளைகள் மூலம் ஆங்காங்கு அரும்பணி ஆற்றும் என்பது உறுதி.

இப்போது ஏற்பட்டிருக்கும் அழிவிற்கு கோடிக்கணக்கில் நிதி தேவைப்படுகிறது. அதுவும் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆகவே ஆங்காங்குள்ள தி. மு. க. தோழர்கள் தனித்தியங்கினாலும், வேறு அமைப்புகளோடு சேர்ந்திருந்தாலும் நிவாரண நிதியை விரைந்து திரட்டுவதோடு, அவ்வப்போதே திரட்டியதை அழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேரும் வகையையும் செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். "காலத்தினாற் செய்த நன்றி, சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க, நாம் செய்யும் உதவி அளவில் மதிப்பிற் சிறியதாயினும், அவை உரியகாலத்தில் வகையறியாது வாடி நிற்கும் மக்களுக்குச் சென்று சேருமானால் அதுவே பேருதவியாகும்.

கலையுலகத் தோழர்கள் பலரும் ஒன்று சேர்ந்து நிவாரண வேலையில் இறங்கி உதவி செய்ய முன்வந்துள்ளது போற்றுதற்குரியதாகும். குறுகியகாலத்தில் பெருநிதி திரட்டக் கூடிய ஆற்றல் திறன் கலையுலகினருக்கு எப்பொழுதும் உண்டு. எந்தெந்த வழிகளில் பெருநிதி திரட்ட இயலுமோ அதை விரைவாகச் செய்து தங்கள் கடமையை நிறைவேற்றுவர் என்பது உறுதி. அவர்கள் முயற்சி வெல்க!

தமிழகத்தில்—திராவிடத்தில் உள்ள எல்லோரும் ஆவன செய்து, புயலிலும், வெள்ளத்திலும் உழன்ற மக்களுக்கு ஆறுதல் அளிப்போமாக!

உயிர்களையும் பொருள்களையும் இழந்து வருந்தும் மக்களனைவர்க்கும் எம் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

களிப்பும் கலக்கமும்

சோவியத் தலைவர்களுக்கு இந்தியாவின் பல் பகுதியில் கிடைத்துள்ள மாபெரும் வரவேற்புகள் பிறநாடுகளில் ஆச்சரியத்தையும், அமெரிக்கா போன்ற நாடுகளில் அதிர்ச்சியையும் அளித்திருக்கின்றன. சாதாரணமாக, பிறநாட்டு அரசியல் தலைவர்கள் வந்தால், பாலம் விமானக்கூடத்தில் மந்திரிகள் வரவேற்பு, ராஷ்டிரபதிபவனில் விருந்து, பத்திரிக்கையாளருக்குப் பேட்டி, பக்ரா - நங்கலுக்குப் பவனி, பின் மீண்டும் விமானக்கூடத்தில் வழியனுப்பு என்று பத்திரிக்கை படிப்பவர்களுக்கு மட்டும் தெரியக்கூடிய விதத்தில் முடிந்துவிடும். அரசியல் தந்திரிகள் அரசியல் தந்திரிகளைச் சந்தித்துவிட்டுப் போவார்கள்; பொருளாதார உதவி ஏற்பாடுகள் கையெழுத்தாகும்; பண்டமாற்றுதலில் வியாபார பேரத்தில்—பலன் நமக்கோ—பெரும்பாலும் வருபவர்களுக்குத்தான் கிடைக்கும். ஆனால் சோவியத் தலைவர்களின் வரவு, தோட்டக் கச்சேரியுடனே, ராஷ்டிரபதி விருந்துடனே முடிந்துவிடவில்லை. அவர்களை அரசாங்க மந்திரி, பிரதானியர்கள் மட்டுமல்ல, மக்கள் கூடிநின்று வரவேற்றனர், நகரங்கள் வரவேற்றன, இந்தியா முழுமையும் வரவேற்றது. அவர்கள் சென்றவிடமெல்லாம் மக்கள் கடல்நெருங்க மோதுவதையேக் கண்டனர். மார்ஷல் புல்கானினுக்கும், குருஷேவுக்கும் கிடைத்த வரவேற்புகள் இதுவரை வேறு எந்த நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் இந்திய மண்ணில் கிடைத்ததில்லை. மக்கள் கூட்டம் ஐந்துலட்சம், பத்துலட்சம் என்ற அளவில் ஒவ்வோரிடத்திலும் கூடி, சோவியத் தலைவர்களைக் கண்டு ஆரவாரித்திருக்கிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு மாபெரும் புரட்சியை நடத்தி, அதில் வெற்றிகண்டு, வரலாற்றில் அழிக்கமுடியாத மாற்றத்தைச் சோவியத் ருஷியா காட்டியது. சோவியத் புரட்சியின் வெற்றி பொருளாதாரக் கேடடைந்து பின்னணியில் நின்ற பல நாடுகளுக்கு ஊக்கந்தருவதாயிற்று. ஏகாதிபத்திய நாடுகளுக்கு பயத்தை ஊட்டுவதாயிற்று, வளர்ந்துவரும் சோவியத் ஆட்சி உலகிலுள்ள பாட்டாளி மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக, மற்றொருபுறம் வல்லரசுகளுக்கும் முதலாளித்துவ முகாம்களுக்கும் பயங்கர எச்சரிக்கையாகவும் ஆகியது. "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை" என்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு, சோவியத் ஆட்சி முறை துவங்கப்பட்டது. எனவே ஏழை பாழைகள், பஞ்சைப் பராரிகள், அடிமைகள், அடக்கப்பட்டவர்கள் இவர்களுக்குச் சோவியத் நாடு சொந்த நாடாக ஆனது. எனவே தான் சோவியத்நாட்டுத் தலைவர்கள் மார்ஷல் புல்கானின், குருஷேவ் வருகிறார்கள் என்றதும், நாட்டுமக்கள் லட்சக்கணக்கில் கூடிநின்று ஆரவாரித்தார்கள், வாழ்த்தி வரவேற்றார்கள். சோவியத் தலைவர் இந்தியாவில் சுற்றுப்பயணமிட்ட இரண்டு வாரங்களில், கோடிக்கணக்கான மக்களின் வாழ்த்துக்களைப் பெற்றனர், அவர்களின் வாழ்த்துதல் கடலலைபோன்று வீசி வந்து, களிப்பெனும் காற்றைத் தந்தது.

சோவியத் தலைவர்களுக்கு இங்கு கிடைத்த வாழ்த்துக்கள் மற்றோர்புறம் கலக்கத்தைத் தந்துள்ளது. சென்னையில், கல்கத்தாவில், பம்பாயில் எழுப்பப்பட்ட வாழ்த்துக்களின் முழக்கம், அமெரிக்க அரசாங்கக் காரியாலயங்களில் பட்டு எதிரொலித்திருக்கிறது. சோவியத் தலைவர்களுக்கு மக்கள் தந்த வாழ்த்தொலி, அமெரிக்காவில் நூறடுக்கு மாளிகைகளில் வாழும் அரசியல் தந்திரிகளைத் திடுக்கிடச்செய்துள்ளது. காரணம் புரியாமலில்லை. மண்குடிசையினர் எழுப்பும் எந்த ஒலியும், மகிழ்ச்சியாயினும் கோபமாயினும், மாளிகைவாசியைப் பயமுயறுத்தத்தான் செய்யும்.

மக்களின் கூட்டம், மக்களின் வாழ்த்து, மக்களின் குரல், இவையெல்லாம் ஒவ்வொரு அணுக்குண்டை வெடிப்பதுபோலிருக்கிறது முதலாளித்துவ ராட்டுகளுக்கு, மக்களின் சக்தி—அது இந்திய அரசியலை எந்தப்பக்கம் திருப்பிவிடுமோ என்று அமெரிக்க அரசியல் தலைவர்களுக்கும், பிரிட்டிஷ் இராசதந்திரிகளுக்கும் கலக்கம் உண்டாகியிருக்கிறது.

மக்களின் களிப்பு, ஆரவாரம், மாற்றார் முகாம்களில் கலக்கத்தை, அச்சத்தை உண்டாக்கியிருக்கிறது. முதலாளித்துவத்தின் மூலபலம் உலகின் பகுதிகளில் ஒவ்வொன்றாக உடைந்துவருகிறது என்பதற்குச் சோவியத் தலைவர்களுக்கு இங்கு மக்கள் தந்த வரவேற்புகள் எடுத்துக்காட்டுகளாகும்.

புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்.

—பாரதிதாசன்

அட்டைப்படம்

பிளாரன்சு நைட்டிங்கேல்

மனிதன் ஆதிகாலந்தொட்டே எதிர்த்துப் போராடி வருபவைகளுள் நோய் முக்கியவொன்றாகும். அறிவியல் புரட்சிக்குப்பின் மருத்துவத்துறையில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்கள் அளவிடற்கரியதாகும். புதிய புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிய புதிய முறைகள் கையாளப்படுகின்றன. அறிவியல் அறிஞர்கள் ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டே இருக்கின்றனர். துன்பபுரியிலுழலும் மக்களை இன்பபுரிக்கு அழைத்துச்செல்ல அறிவியல் தனது முழுத்திறனையும் பயன்படுத்துகிறது.

நோயாளிகள் குணமடைய வெறும் மருந்துகள்மட்டும் உதவுவதில்லை. நோயாளியின் மனதில் ஏற்படும் துன்பங்களைக் குறைக்கவும், ஆறுதல் கூறவும் உதவிகள் செய்யவும், பணியாளர்கள் தேவை. நல்ல காற்றோட்டமான, தூய்மையுடன் விளங்கும் இடம் வேண்டும். இந்த வசதிகளைக்கொண்டதாக இன்றைய மருத்துவ விடுதிகள் விளங்குகின்றன. உடல் நலம்பெற சூழ்நிலையும், பணிமுறையும் முக்கியமென்பதை உணர்த்தி அதற்காக அரும்பாடுபட்டு மருத்துவப் பணிமுறையை வகுத்து வளர்த்திட்ட அறிஞர்களில் பிளாரன்சு நைட்டிங்கேல் என்ற இங்கிலாந்தைச் சேர்ந்த பெண்மணி முதன்மையானவராகும்.

பிளாரன்சு நைட்டிங்கேல் 1820-ம் ஆண்டு மேத்திங்கள் 12-ம் நாள் பீட்டர் நைடிங்கேல் என்பவருக்கு இரண்டாவதுமகளாக இத்தாலியில் பிளாரன்சு நகரில் பிறந்தார். பிறந்த ஊரை முன்னிட்டு பிளாரன்சு என்று பெயரிடப்பட்டது. பெற்றோர் இங்கிலாந்துக்குத் திரும்பி லீ ஹர்ஸ்ட் என்ற நகரில் குடியேறினர். பிளாரன்சின் இளம்பருவம் இங்கேயே கழிந்தது.

பிளாரன்சு பதினேழாம் வயதடைந்தபோது பொதுநலத் தொண்டில் அதிக ஊக்கங்கொண்டு அதற்கான செயல்களில் ஈடுபட்டார். அடிக்கடி மருத்துவ விடுதிகளுக்குச் சென்று நோயாளிகளைக் கண்டுவருவதும், கிராமப் பள்ளிகள் மூலம் கல்வி போதிப்பதும் அவரது அன்றாட வேலையாகியது.

நோயாளர் பணியில் (Nursing) அதிக ஆர்வமுள்ளவராக 1849-ல் கெய்சர்வெர்த் என்ற நகரிலுள்ள மருத்துவவிடுதியில் நுழைந்தார். அதேயாண்டுக் கடைசியில் எகிப்துக்கு பாரிஸ் வழியாக சுற்றுப்பயணம் செய்துவரக் கிளம்பினார். அலெக்சாந்திரியா நகர் மருத்துவவிடுதியில் நோயாளர் பணிமுறையைப்பற்றி அறிந்தார். இரண்டு ஆண்டு சுற்றுப்பயணத்திற்குப்பின் இங்கிலாந்து திரும்பினார். லண்டனிலும் எடின்பரோவிலும் பின் 1853-ல் பாரிசிலும் மருத்துவவிடுதிகளில் நோயாளர் பணிமுறையைப் பயின்றார். இங்கிலாந்து திரும்பியதும் அவருக்கு லண்டனிலுள்ள ஒரு மருத்துவவிடுதியில் மேற்பார்வையாளர் பதவிக்கு அழைப்பு வந்து அதை ஏற்றார்.

1854-ல் கிரிமியா யுத்தத்தில் இங்கிலாந்து இறங்கியது. அதுவரை கண்டிராத அழிவு அந்த யுத்தத்தில் ஏற்பட்டது. லட்சக்கணக்கான வீரர்கள் மடிந்தும், காலிழந்தும், கையிழந்தும், கொள்ளை நோயால் தாக்கப்பட்டும் அவதியுற்றார்கள். அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகள் இல்லையென்ற பெருங்குறை ஏற்பட்டது. அக்குறைகளைத் தீர்க்க பிளாரன்சும் மற்றும் ஐம்பதுபேர்களும் போர்முனை நோக்கிப் புறப்பட்டனர்.

ஸ்கூட்டரி என்ற இடத்திலுள்ள மருத்துவ விடுதிக்கு வந்துசேர பதினைந்து நாட்கள் ஆகியது. அப்பொழுது அங்கே நிலைமை மோசமாக இருந்தது. மடியும் வீரர்கள் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே இருந்தது. மடியும் நோயாளிகளுக்காக, புதிய நோயாளிகள் வெளியே காத்திருந்தனர். பிளாரன்சு தனது இடைவிடா முயற்சியினால் விடுதியின் நிலைமையைச் சீர்திருத்தி சகல வசதிகளும் ஏற்பட வகைசெய்தார். 1855-ம் ஆண்டில் பிப்ரவரிதிங்கள் இறப்பவர் எண்ணிக்கை 100-க்கு 42 ஆக இருந்தது மூன்றே மாதங்களில் பிளாரன்சின் உழைப்பால் 100-க்கு 2 ஆகக் குறைந்தது.

அவர் 1859-ல் "மருத்துவ விடுதிகளின் குறிப்புகள்" என்றும் 1860-ல் "நோயாளி பணிமுறைக் குறிப்புகள்" என்று இரு நூல்கள் எழுதி வெளியிட்டார். அவைகளில் மருத்துவப்பணிச் சீர்திருத்தம் பற்றிய அவரது கருத்துகள் வெளிவந்தன.

1907-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அவருக்கு ஆர்டர் ஆப் மெரிட் என்ற பட்டம் ஏழாவது எட்வர்ட் மன்னரால் வழங்கப்பட்டது. இந்தப் பட்டத்தைப் பெற்றவர்கள் சிலரேயாகும். பிளாரன்சு இந்தப் பட்டத்தைப்பெற்ற முதல் பெண்மணியும் ஒரே பெண்மணியுமாகும்.

பிளாரன்சு நைட்டிங்கேல் தனது 91-வது வயதில் 1910-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் நாள் இறந்தார். இங்கிலாந்தின் சிறப்புக்குரியவர்களின் வரிசையில் பிளாரன்சு நைடிங்கேல் ஒருவராக மதிக்கப்படுகிறார்.

தேர்தலும் - அரசியலும்

தேர்தலும் அரசியலும் தோன்றியது, இன்று நேற்றல்ல ; அவை பன்னெடுங்கால மாக வளர்ந்துவருகின்றன.

மக்கள் மலைமுழைகளில் மரப்பொந்துகளில் வாழ்ந்த நாளுண்டு. அன்றைய வாழ்க்கை அன்றாடு சரியெனப் புள்ளினங்கள்போல் மிருகங்கள்போல் வாழ்ந்த நாளுண்டு. காய் கனிகள் கண்டதைப பிடுங்கித்தின்று குரங்கு கள்போல் வாழ்ந்த நாளுண்டு. அறிவு வளர்ச் சியின் பயனாய், அவைகளினின்றும் பிரிந்து புது வாழ்வு காணத்தொடங்கினர்.

நாடு-குடிகள்

புல் விதைகளினின்றும் தவச வித்துக்கள் கண்டனர். அவற்றை நட்டுப் பயிர்செய்ய ஒப்புரவான நிலம்நாடி மலையினின்றும் இழிந்து சமவெளி கண்டனர். நட்டுப் பயிர்செய்ய இலக் கானதால், அதற்கு நாடு எனப் பெயரிட்டனர். அந்நாட்டில் இயற்கையின் காப்புக்காகச் செயற்கை முறையில் குடில் (குடைவு இல்)கள் கண்டனர். அவற்றை உறைவிடங்களாகக் கொண்டு வாழ்ந்ததால் குடிகள் எனப் பெயர் பெற்றனர்.

உழவு-ஊழ்

தனித்தனியே கணவனும் மனைவியுமாகப் பொறுப்பேற்றுத் தனித்தனிக் குடிசைகளில் அமர்ந்து, நாளைக்கும் என்ற எண்ணம் தோன் றவே, உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்க நேர்ந்தது. அவனவன் உழைப்புக்குத் தக்கவாறு குடிசைகளில் விளைபொருட்குவி யல்கள் மிகுதியும் குறைவுமாகக் காணப்பட் டன. இவ்வேற்றத்தாழ்வுகள் ஏன்? இது அவனவன் உழைப்புத் தந்த ஊழ் எனக் குறிப் பிட்டனர். (ஊழ் பற்றிப் பின்னர் எழுதப்படும்)

உழைஉ - உழைப்பு, உழைவு, உழவு. உழவு தந்த எதிர்காலபலன்-ஊழ். ஊழ்த்தல்-கொடுத் தல். “ தீஞ்சுளைப் பலவின்பழம் ஊழ்க்கும்மே”
—புறநானூறு.

தேர்தல்-அரசியல்

உழவர்கள் உழைப்பிற்காகவும், விளைநிலம் திருத்தவும் வெளிச்செல்லவேண்டுமல்லவா, அவ்வமயங்களில் உழைப்பற்ற சோம்பேறிகள் குடிசைகளிற் புகுந்து தின்ன (திருட)த் தொடங்கினர். இதன் விளைவாகச் சுவர்கள், கதவுகள், பூட்டுக்கள், விஞ்ஞான முறையில் வளர்ந்தன. சோம்பேறிக் கூட்டம் நாளடை வில் கொள்ளைக்கூட்டமாக மாறின. குடிகள் செய்ததென்ன? உடல் உரம், அறிவு, ஆற்றல் வாய்ந்த தங்களிற் சிலரைத் தேர்ந்தெடுத் தனர். அவர்களுட் பொறுப்பான ஒரு தலை வனையும் ஏற்படுத்தினர். இவர்களின் பணி: ஊர்க்காவல்செய்துவரல், கொள்ளையர்களை, எதிரிகளை விரட்டியடித்தல், விளைபுலங்களை யழிக்கும் விலங்கினங்களை வேட்டையாடல், முதலியனவாகும்.

வில், வாள், ஈட்டி, வேல் போன்ற படைக் கலச் செலவுகட்கும், வாழ்க்கைச் செலவுகட் கும், குடிகள் தங்கள் விளைபொருள்களில் ஆறில் ஒருபகுதியைக் காவற்கூலியாக அளித்துவந்தனர். இவ்வாறு உண்டாக்கிய படையும் படைத்தலைவனும் நாளடைவில், ஊர்க்காவல் நாட்டுக்காவலாய் மாறி அரசன் என்ற பெயரால் பரம்பரையாக நீடித்த வரலா றாகும்.

காவல் - அரசு. காவலன் - அரசன். காவற் கூலி - அரசிறை. கூலம் - தவசம். கூலி - (உழைப்புக்காகத்) தவசம் பெறல்.

முடியாட்சி

குடிமக்கள், தங்கள் நலன் பாதுகாக்கும் தகுதியாளனது சிரத்தில் முடிசூட்டிக் கரத்தில் வாளெடுத்துக்கொடுத்து, முழு அதிகாரமும் அளித்தனர். அரசர்களும், குடிகளின் நலன் காப்பதே தங்கள் கடமையாகவும், தவறியவன், கடைமையிற்றவறிய இழிந்தவனென்றும் கொண்ட கொள்கையால், முடியரசும் நீடிக்கக் காரணமாயிருந்தது.

“ என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர்
பரப்பிக்
குடிபழிதூற்றும் கோலேனாகுக”

—நெடுஞ்செழியன், புறநானூறு.

"செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉம் கோலோ னுருக "......
—செங்குட்டுவன், சிலப்பதிகாரம்.

" நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக எவ னொருவன் உயிரையும்விடச் சித்தமாயிருக் கிறுனே அவனே உண்மையான அரசன்."
—ஔரங்கசீப்.

இத்தகைய முடிமன்னர்களின் சூளுரைகளே அவர்களின் கொள்கைகளை விளக்குவதாகின் றன. என்றாலும் நாளடைவில், முடியாட்சி நிலையங்களில் தன்னலம் தலைதூக்கத் தொடங் கிற்று. மக்கள் சமுதாயமோ தம் உரிமை பறி போவதை எண்ணலாயிற்று. பல எண்ணங் கள் ஒன்றுபடும்போது அவை இயக்கமாக உருப்படும். அவ்வியக்கம் செயற்படும்போது அரசியலிடம் மோதிக்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

மக்களின் எதிர்ப்பை மதியாது எதிரிகளாக மதித்து, எப்படியாவது சமாளித்துவிடலா மென மனப்பால்குடித்துத் தடியாட்சி நடத்திய மன்னுதி மன்னர்கள் மண்ணோடு மண்ணாய் மறைந்த கதைகள் வரலாற்றில் காண்கிறோம். இன்றைய நிலையில் ஏறத்தாழ முடியாட்சிகள் ஒழிந்து குடியாட்சி முறை, என்ற முகவரியில் தான் அவை நடந்துவருகின்றன. செயலில் உண்டா? உதாரணமாக ;

" புகைவண்டியில் ஏறுங்கள், எங்கே செல்ல வேண்டுமென ஆணையிடுவதோ, வண்டியை ஓட்டும் உரிமையோ, உங்கட்கில்லை " என்பது முடியாட்சிமுறை.

" புகைவண்டியில் ஏறும் உரிமை உங்கட் குண்டு. எங்கேபோவதென முடிவுசெய்யும் உரிமை உங்கட்குண்டு. இன்னார்தான் ஓட்ட வேண்டும் எனத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் உங்கட்குண்டு என்பது, குடியாட்சி (சனநாய கம்) முறையாகும்.

நாட்டில் காணமுடியாதது

ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒரு கோமாளி வருவான். " கண்ணியம் என்றால் என்ன " என ஒரு கேள்வி போடுவான், " கண்ணியம் என்பது ஏட்டிலுள்ள ஒரு வாக்கியம். நாட்டில் காணமுடியாதது " என விடையளிப்பான். அதுபோன்று—குடியாட்சிமுறை என்பதும் ஏட்டிலுள்ள ஒரு வாக்கியமேயன்றி, அமெரிக் காவிலிருந்து ஆசியக் கீழ்க்கோடிமுனைவரை உலகிலேயே காணமுடியாத ஒன்றாக உளது.

அரசியலமைப்பு பூர்வபீடிகை

" இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியா வைப் பூரண ஆதிபத்தியமுள்ள ஜனநாயகக் குடியரசாக அமைக்க மனப்பூர்வமாகச் சங்கல் பம் செய்துகொண்டு, இந்தியாவில் எல்லா பிரஜைகட்கும் சமூக பொருளாதார ராஜீய நீதியும், சிந்தனை, பேச்சு, நம்பிக்கை, வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், அந்தஸ்து வசதி ஆகியவற்றில் சமத்துவமும், உரியதாக்கு வதையும், தனி நபரின் கௌரவத்தையும், இந்திய இன ஐக்கியத்தையும், உறுதிப்படுத் துவதற்கான சகோதரத்துவத்தை வளர்க்கும் பொருட்டும், நமது அரசியல் நிர்ணயசபை மூலம்—1949 நவம்பர் 26-ந் தேதியன்று இந்த அரசியலமைப்பை ஏற்றுச் சட்டமாக இயற்றி நமக்கே அளித்துக்கொள்கிறோம் " இம்முக வுரையின் அடிப்படையில் தோன்றியதுதான், நம்நாட்டு அரசியலமைப்புக்கள்.

60 கோடி மக்கள்தொகை கொண்ட சீனக் குடியரசு, பழைய சட்டச் சுவடிகளை வெந்நீ ரடுப்பிற்குப் பயன்படுத்திவிட்டு, ஒரு சில அமைப்பாளர்களால் ஒரே திங்களில் ஒரு பள்ளி மாணவனது வாசகச்சுவடியளவில் தனது புதிய சட்டச்சுவடியை, தொழிலாளர், உழவன், முதற்கொண்டு படித்தறிந்துகோள் ளும் நிலையில் வெளியிட்டிருக்கிறது.

நம்நாடும் சுதந்திரம் பெற்றதும் சட்டம் புதுப்பிக்கத்தொடங்கியது. பொதுமக்களால் தேர்ந்தெடுக்கவில்லை யென்றாலும்—சட்டம், கல்வி, விஞ்ஞானம், சமயம், மொழி, வைதீகம், முதலியவைகளில் தேர்ந்த நிபுணர்களாகச் சுமார் 250 பேர்வரை ஆட்சியாளர்களே தேர்ந் தெடுத்தனர். "அரசியல் நிர்ணயசபை" நிறு விச் சட்டங்கள் எழுதத்தொடங்கினர்.

மனு மாந்தாதா காலத்திருந்து பிரிட்டன் இறுதிக்காலம்வரை நீடிக்கச்செய்துவந்த செல் லரித்த சட்டங்கட்கு மீண்டும் பூண்கட்டினர். மேல்நாட்டுக் குடியரசுத் தொகுப்புகளிலிருந்து பல பொறுக்கிச் சேர்த்தனர். 1929-ல் எஸ். முத்தையாமுதலியாரால்தோற்றுவிக்கப்பட்ட பின்தங்கியவர்களின் கல்வி, அரசியல் அலு வல்களின் சலுகை (கம்யூனல் ஜீ. ஓ.) போன் றவைகளைப் புதிர்போட்டு மூடினர். " மத்திய சர்க்கார் வலிவுபெற்றிராவிடில் சுதந்திரம் பய னளியாது" என்று வெள்ளையன் காலத்திருந்த மாகாண சர்க்கார்களின் உரிமைகளைக்கூட வெற்றிலைப்பாக்கில் காணிக்கையாகவைத்து டில்லிக்கு ஒப்புவித்தனர்.

741

தேர்தல் முறைகள்

முடியாட்சிக் காலத்தும் அமைச்சர்குழு தேர்ந்தெடுப்பது நாட்டு மக்களின் பொறுப்பிலிருந்ததால் அமைச்சர்க்குரிய பொதுவாழ்வில் விருப்பம்—நீதிக்கு வாதாடல்—நடுநிலை தவறுமை—காலமறிதல் — வலியறிதல்—இடனறிதல்—போன்ற வள்ளுவர் கூறும் இலக்கணங்கள் வாய்ந்தவர்களை குடிகளே தேர்ந்தெடுத்துவந்தனர்,

நாளடைவில் மக்கள் தேர்ந்தெடுத்து வற்புறுத்தியதுபோய், அரச இன்பம் காரணமாய், ஆட்சிவிரும்பிகள், நான் நீஎன முன்வரலானார்கள். மக்களிடையேயும், இலக்கணம் பார்க்கும் கடமைபோய்-பகை-உறவு -அச்சப்-தயவு - முதலியன பற்றியும் எண்ணவேண்டியிருந்ததால் மறைவு முறையில் தங்கள் கருத்துக்களை வெளியிட வாய்ப்புக்காணலாயினர். அவரவர்கள் பெயர்க்கு நேராக சுவர்களிற் கோடுகள் கிழித்தும்—அல்லது சிறு கற்களை வைத்தும், அவ்வெண்ணிக்கைகளின் மூலம் தேர்தல் நடந்துவந்ததாக வரலாறுகளில் தெரிகிறோம்.

பெட்டிமுறைத் தேர்தல்

குடியாட்சி நடைமுறையில், வாக்குரிமை எல்லா மக்கட்குமிருக்கவேண்டும். தன் மனதில் தெளிந்ததை விண்டுகாட்டாது, யாரொடும் வம்பளக்காது தாராளமாகச் செய்ய வாய்ப்புத் தருவது பெட்டிமுறையொன்றேதான். இதை அமெரிக்காவில் ஹாரிங்டன் என்பவர் 17-ம் நூற்றாண்டிலேயே —ஒஷியானா—என்ற தனது நூலில் வலியுறுத்திக் கூறியுள்ளார். எனினும் 1912-ல் தான் இம்முறை அமெரிக்கா முழுதும் பரவியது.

நம்நாட்டில் முன்பு சில பணக்காரர் பட்டாதார்கட்கு மட்டும் வாக்குரிமையிருந்தது. பின்பு படித்தவர்கட்கெல்லாம் ஏற்பட்டது. படியாதவர்கட்கில்லை. ஏன்—தேர்தலுக்கு நிற்பவர்கள் பெயர்கட்கு நேராகப் புள்ளடி(X) இட்டு அதைப் பெட்டியில் போடப்படியாதவர்கட்கு முடியாது, ம்வேறொருவரைக்கொண்டு செய்விப்பது மறைமுகத்தேர்தலுக்கு முரணானது. ஆகலின் அவ்வாறு ஏற்படுத்தப்பட்டன.

குடியரசிலக்கணப்படி 21-வயதுக்கு மேற்பட்ட எல்லா மக்களும் தனி உரிமையுடன், வாக்களிக்கவேண்டுமல்லவா? ஆகலின் அனைவர்க்கும் நம்நாட்டிலும் வாக்குரிமை யளிக்கப்பட்டது. இச்செயலை, " நூற்றுக்குத் தொண்ணூறுபேர் படிக்கத்தெரியாத பாமரமக்கள் வாழும் நாட்டில் சர்வஜன ஓட் என்பது, ஒரு கேலிக்கூத்து. இதை இந்தியா செய்திருக்கிறது" எனப் பல ஆங்கிலச் செய்தித்தாள்கள் அன்றே வெளியிட்டன. அன்றைய நிலையில் அவ்வாறுதான் இருந்தன. ஆனால் சென்ற பொதுத்தேர்தலில், தேர்தலுக்கு நிற்பவர்கள் ஒவ்வொருவரினுடைய அடையாளங்களாக, மாட்டுபெட்டி, ஆலமரப்பெட்டி, கோழிப்பெட்டி, கூசாப்பெட்டி, என்றெல்லாம் ஏற்படுத்திவிட்டதால், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எல்லாம் தாராளமாய்த் தங்கள் வாக்குரிமைகளை மறைவுமுறையிற் பயன்படுத்த வசதியாகத்தானிருந்தது. கேலிக்கூத்தென்று சொல்வதற்கும் பதிலளிப்பதாகத்தானிருந்தது. ஆனால், ஆட்சியாளர்களின் செயல்முறைகள்தான் பல கேலிக்கூத்துகளை உண்டுபண்ணுகின்றன ; இன்று.

பாராளுமன்றம்

மக்கள் தங்கள் தனியுரிமை கொண்டளிக்கும் வாக்குகளிற் பெரும்பான்மையாகப் பெற்றவர், உறுப்பினர் ஆவர். உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் அமைச்சராவர். அவரே அமைச்சர்குழு அமைத்து ஆட்சிநடத்தும் பொறுப்பாளராகிறார். ஆகலின் பொறுப்பளிக்கும் அடிப்படையுரிமை மக்களிடம்தானே உள்ளது; குடியரசிலக்கணமும் இதுதானே, என மூலைக்குறைவாளர்களிடம் கூறலாம். மக்களும்சரி, உறுப்பினர்களும்சரி, அமைச்சர்களானாலும் சரி, தத்தம் அடிப்படை உரிமைகள் பறிபோவதை மறந்து, இன்றைய தேர்தல்களில் வெற்றிக் களிப்புக்கொண்டாடுவதும் ஒரு கேலிக்கூத்து.

தனியுரிமை பரிபோதல்

ஒரு தொகுதியிலுள்ள, மக்கள் தேர்தலுக்கு முன்பே அத்தொகுதிக்கு கட்சியமைப்பிலுள்ள தேர்தல் குரு (அட்காக்கமிட்டி) ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றனர் எவ்வாறெனில், தன் சொந்தக் கருத்துக்களை வெளியிடாமல், கட்சி என்ன சொன்னாலும் பேசினாலும் அவைகளையே போற்றி, எதிர்க்கட்சிகள் என்னசெய்தாலும் அவைகளை தூற்றி, கட்சியின் ஆணைக்குட்பட்டு அடங்கி நடப்பவர்தானா? வெற்றிகொள்ளும் வசதி படைத்தவர்தானா! அசைத்தபடி ஆடுபவர்தானா? என்பதெல்லாம் தெரிந்தபிறகே, தனியுரிமைப் பல் பிடுங்கப்பட்டு, உரிமையிழந்தவராய் மக்கள் முன்னிலையில் நிறுத்தப்படுவர்.

இது நிற்பவர்பற்றிய நிலை. இதுவும் ஒரு கேலிக்கூத்து.

"குணனாடிக் குற்றமுநாடி அவற்றுள்—மிகைநாடி மிக்க கொளல்" என்ற தேர்தல் இலக்கணத்தைப் பயன்படுத்த, நிற்பவர் மக்கட்கு நன்கு தெரிந்தவராயிருத்தல் வேண்டுமல்லவா? அங்ஙனமிராது. தேர்தல் செங்கற்பட்டில், நிற்பவர் திருநெல்வேலியாயிருக்கும். கட்சியறிக்கைகள்—செய்தித்தாள்களின் வெளியீடுகள்—உள்ளூர்க் கட்சிக் கண்காணிகளின் அறிமுகப்படுத்தல்கள் — மும்முரமாயிருக்கும். "நிற்கும் ஆள் ஒரு துரும்பாக இருக்கட்டும், அக்கவலை உங்கட்கேன்? வாக்குரிமைகளைக் கட்சிக்குக் கொடுங்கள். எதிர்க்கட்சிகள், எக்காரணம்கொண்டும் ஆளவர முடியாது. மேலும் ஒட்டையும் உடைசலும். ஆளும் கட்சியே மிகப்பலமானது, புனிதமானது, நாட்டிற்கு நன்மை வேண்டுமானால், ஆளும் கட்சியால்தான் முடியும்" எனப் பேசுவார்கள். எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியின் ஊழல்களை அள்ளி வீசுவார்கள். இந்நிலையில் பேச்சுமேடைகள் ஏச்சு மேடைகளாகக் காட்சியளிக்கும். இதற்கிடையே அரசாங்க அமைச்சர்களும் பிரச்சாரத்தின்பொருட்டு மூலை முடுக்குகளெல்லாம் படியேறி யிறங்கும் காட்சிகள் நடைபெறும். இக்குழப்பநிலையில், 100-க்கு 90 பேர் படியாத அப்பாவி மக்கள் தங்கள் தனியுரிமைகளும் போய்—தேர்ந்தெடுக்கும் ஆளும் போய்—தேர்தல் இலக்கணமும் போய்—கட்சிகள் பற்றிக் கருதும் நிலைக்கு வந்துவிடுகின்றனர். இது மக்களிடையே விளைவிக்கும் ஒரு கேலிக்கூத்து.

கட்சியமைப்பு

பொருளுலகம் தங்கள் பணங்கட்கு சரிவோ கெடுதலோ தனிப்பட்ட முறையில் ஏற்பட்டால் என்செய்வதென்றஞ்சி நிதி நிலையங்களில் (பாங்கி) போட்டுவைத்துக்கொண்டு விருத்தியின்பொருட்டு கூட்டு வாணிகமும் (லிமிடெட் கம்பெனி) நடத்திவருகின்றனர்களல்லவா? அதுபோன்று காங்கிரசுக் கட்சியமைப்பும், செல்வாக்குகளின் கூட்டுப் பண்ணையாகும். இதில் யார் வேண்டுமானாலும் சேரலாமென்றிருப்பதால் பொருளுலகம் முண்டியடித்துக்கொண்டு உள்ளேறியது. தன்னலம் தலைதூக்கிற்று. சகியாது அறிவுலகம் வெளியேறத் தொடங்கியது. இன்று, அரசியலமைப்புப் போய்க் கட்சியமைப்பு—நாடு முன்னேற்றம் போய் கட்சி முன்னேற்றம். நாடே பெரிதென்பதுபோய்க் கட்சியே பெரிது என்றாய்விட்டது. இன்றைய தேர்தலமைப்பில் பணக்காரர்களன்றி பணமில்லாத அறிஞர்களாக இருக்கட்டும், அல்லது யோக்கியர்களாக இருக்கட்டும், தலைநீட்டமுடியுமா? வெற்றிகாணமுடியுமா? நாட்டில் பணக்காரர் எத்துணைபேர்? அல்லாதார் எத்துணைபேர்? 100-க்கு 8 பேராக உள்ள பணக்காரர்கள்தானே ஆட்சி நிலையத்தைச் சூழ்ந்துநிற்கின்றனர். ஆதலின் இன்று பணநாயகம் நடைபெறுகிறதென்று சொல்லிவிட்டால் பேச்சில்லை. சனநாயகமென்று சொல்கிறார்களல்லவா, இது ஒரு கேலிக்கூத்து;

இந்தியாவில் $18\frac{3}{4}$ கோடி வாக்காளர்களில் $2\frac{3}{4}$ கோடி பேர்தான் படித்தவர்கள். அதிலும் 3 இலக்கம்பேர்தான் செய்தித்தாள்கள் படிப்பவர் எனக் கூறப்படுகிறது. இன்று தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 100-க்கு 97-ம் படிப்பில்லை என்றுதான் சொல்லவேண்டும் நாட்டுப்புறத்தில்.

வேருகுமாந்தர்

எதிர்க்கட்சியில் நிற்கும் ஒருசிலர் ஆளும் கட்சியின் ஊழல்களை அக்கு அக்காக எடுத்துக்காட்டுவர். ஆட்சியில் நீதி இல்லையே எனப் பரிதபிப்பர். பொதுநல ஆர்வமுள்ளவராகவும் நன்கு தெரிந்தவராகவுமிருப்பர். ஆகலின் மக்கள் தேர்ந்தெடுத்தனுப்புவர் அங்கு சென்றதும் ஆட்சியாளர் பதவித்துண்டை எடுத்து வீசியவுடன் எட்டிப் பிடித்துவிடுவர். தேர்ந்தெடுத்த மக்களைத் தெருவில் விட்டுக் கூடுவிட்டுக் கூடுபாய்ந்துவிடுவர். இது அரசியலரங்கத்தில் நிகழும், 'பிளாக்மார்க்கெட்' அல்ல, அல்ல, வெளியில் நிகழ்வதுதான் கள்ளச்சந்தை (பிளாக்மார்க்கெட்) பித்தலாட்டம். அரசியலரங்கத்தில் நிகழ்வது "ராஜதந்திரம்" இத்தகைய வேருகுமாந்தரை ஒருசிலர் என்றேம், வள்ளுவர் பலர் என்கிறார்.

" எனைவகையாற்றேரியக் கண்ணும் வினைவகையால்
வேறாகு மாந்தர் பலர்"

இத்தகையோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுண்டே ஒழிய மீட்சிப்படலத்திற்குப் பொதுமக்கட்கு வழியில்லை. இதுவும் ஒரு கேலிக்கூத்து.

காந்தியார் விளக்கிய தேர்தல்

"கிராமங்கள்தோறும் பஞ்சாயத்து போர்டு ஏற்படுத்தி அதற்கு சனநாயக அடிப்படையில் தேர்தல் நடைபெறவேண்டும். இந்தப் போர்டுகள் ஒவ்வொருவரைத் தேர்ந்து

743

சிறுகதை : மொழிபெயர்ப்பு

கடைசிப் பயணம்

[பிராண்டல்லோ என்ற இத்தாலியச் சிறுகதை எழுத்தாளர் தாம் இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பு எழுதிய கதை. இதுவே அவருடைய கடைசிச் சிறுகதையாகும். அவர் வாழ்க்கைக் கதையின் கடைசிப் பயணமும் இதுவே. இந்தக் கதையின் தலைப்பு, இதன் ஊடே இழையோடும் துன்பத்தின் பின்னணி, ஏமாற்றம் இவை படிப்பவர்கள் மனதில் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடியது. கதைத்தலைவன் வாயிலாக ஆசிரியரே, தன் கதையின், தான் வாழ்ந்த வரலாற்றின் முடிவிற்கு விடைபெறுகிறார்.]

பனி விழுந்தது. திடுக்கிட்டு விழித்தேன். நடு இரவு. கூப்பிடு தூரத்தில் சின்னஞ்சிறு ரயில் நிலையம். ரயில்பாதையருகில் விழுந்து கிடந்தேன் நான்.

ஆம்! தனியாகத்தான். பெட்டி படுக்கை எதுவுமில்லை.

ஓடிக்கொண்டிருந்த ரயிலிலிருந்து எப்படி விழுந்தேன்? விழுந்தேனா! இல்லை, உடம்பில் ஒரு சிறு காயம்கூட இல்லையே! கண்ணைக் கசக்கினேன். மண்டையைச் சொரிந்தேன். என்னையே எத்தனையோ கேள்விகள் கேட்டேன். ஒன்றும் பயனில்லை. எப்படி நான் இங்கு வந்தேன் என்பதே புரியவில்லை.

முன்பின் தெரியாத இடம். நேரமோ நடு இரவு. யாரையாவது வழி கேட்கலாம் என்றால் யாரையும் காணோம். ரயிலில் எங்கு கிளம்பினேன் என்றே எனக்கு நினைவில்லை. எந்த ஊரிலிருந்து கிளம்பினேன்? எந்த ஊருக்குச் செல்லும் வழியில் இங்கு விழுந்து கிடந்தேன்? எதுவும் புரியவில்லை. எதற்காக இந்தப் பிரயாணம் ஆரம்பித்தேன்? நான் ரயில் ஏறும்பொழுது கையில் ஏதாவது சாமான்கள் வைத்திருந்தேனா? சாமான்கள் எதுவும் இருந்திருக்காது. இருந்தால் இப்பொழுதும் என்னிடம் இருக்கவேண்டுமே.

அடர்ந்த இருட்டில் ரயில் நிலையத்தின் பெயர்கூடத் தெரியவில்லை. அதனால் என்ன, நான் நிச்சயமாக இதற்குமுன் இந்த இடத்திற்கு வந்ததில்லை. ரயில் நிலையத்திற்கு வெளிப்புறமும் வெரிச்சோடிக்கிடந்தது. மூலையில் மாத்திரம் ஒரு சின்னஞ்சிறு விளக்கு தன்னந்தனியாக எரிந்துகொண்டிருந்தது. நான் உயிரோடு இருக்கிறேனா என்ற சந்தேகத்தைத் தவிர்க்க விளக்கு வெளிச்சத்தை நெருங்கினேன். என்னையறியாமல் என் கைகள் என் உடம்பை உச்சிமுதல் ஒருமுறைத் தடவிப்பார்த்துக்கொண்டன. முன்பின் அறிமுகமாகாத அந்த ஊரில், நடு இரவில், யாருமில்லாத இடத்தில் நடமாடுவது நான்தான், என்பது உறுதியாயிற்று.

இந்த இருட்டு அதிக நேரம் நீடிக்காது. சீக்கிரம் விடிந்துவிடும். சிறிதுநேரம் கழிகிறது. சூரியன் உதயமானதும், நான் மெதுவாக ஊரின் உட்புறம் சென்றேன். அங்கு காண்பவைகள் எனக்கு திகைப்பையும், ஆச்சர்யத்தையும் அளித்தன. என்னைப்போன்ற

தாலூக்கா மன்றத்துக்கனுப்பவேண்டும். இவைகள் தேவையான பேர்களைத் தேர்ந்து சில்லா மன்றத்திற்கனுப்பவேண்டும். இவைகள் தேர்ந்து மாகாணத் தலைநகர்களிலுள்ள பாராளுமன்றத்திற்கனுப்பலாம். அவர்கட்கே மந்திரிசபை அமைக்கும் பொறுப்பிருக்கலாம். இப்பாராளுமன்றத்திலிருந்து உறுபபினர்களை மத்திய பாராளுமன்றத்திற்கனுப்பலாம்.''

இத்தகைய முறையில் தேர்தல் நடைபெற்றால் இது உண்மைச் சனநாயகமாகவும் இருக்கும், மேற்கூறிய கேலிக்கூத்துகள் அனைத்தும் நுழைய இடமும் இருக்காது. ஆகாவழி உறுப்பினர்கள்மீது மீட்சிப்படலம் நடத்தவும் வகைவழி ஏற்படும். ஏழ்மை நாட்டின் கோடிக்கணக்கான வெட்டிச் செலவுகள் நாட்டிற்குப் பயன்படுவதாயிருக்கும். இவையனைத்தும் உணர்ந்துதான் காந்தியார் விளக்கினார். அவர் சொற்படி ஆட்சிக்குழுவினர் நடப்பார்களா?

—மே. சி. சிதம்பரனார்.

மற்ற மனிதர்கள் அங்கு நடமாடினார்கள். ஆனால் என்னைப்போல் திகைப்புடன் அல்ல. தங்களுடைய செயலும் நிலையும் அறிந்தவர்களாய் மக்கள் தங்கள் தினசரி அலுவல்களை நிறைவேற்றும்பொருட்டு அங்கும் இங்குமாகச் சென்றுகொண்டிருந்தனர்.

நான் கூட்டத்தில் அப்படியே இழுத்துச் செல்லப்பட்டேன். இருந்தபோதிலும் என் உள்ளிருந்த ஏதோ ஒரு உணர்வு என்னைப் பின்னுக்கு இழுத்து அமைதியை அழித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் ஏதோ காரியமாகச் செல்கிறார்கள். ஆனால் நான்! நான் யார்? எங்கு செல்ல விரும்புகிறேன்? எனக்கு என்ன வேலை? என்பதொன்றும் அறியாது விழிக்கிறேன். என்னதான் என்னைச் சமாதானம் செய்ய முயன்று, அவர்களைப் போல நடக்கவும், நடிக்கவும் முற்பட்டாலும் என் உள்ளுணர்வு என்னைக் கோழையாக்கிச் செயலற்றவனாக ஆக்குகிறது.

தொழில், வேலை, எதுவும் செய்யாமல், என் வாழ்நாளைக் கழித்திருக்கமுடியுமா? ஆனால் நான் பாடுபட்டு உழைத்ததும் எனக்கு நினைவிருக்கிறது. நான் உழைத்தது கனவில்தானா? மற்றவர்கள் என்னைப் பார்த்ததும் மரியாதை செய்கிறார்களே, அவர்களுக்கு என்னைப்பற்றித் தெரியுமா? அல்லது வேறு யாருக்குப் பதிலாக என்னைத் தவறுதலாக நினைத்து மரியாதை செய்கிறார்களா? நான் இதற்குமுன் இந்த ஊருக்கு வந்ததே இல்லையே. எனக்கு ஏன் இவ்வளவு மரியாதை செய்கிறார்கள். என் உடையைப் பார்த்தா? வேறு யாருக்கும் சொந்தமான உடையை நான் அணிந்துகொண்டிருக்கிறேனா? என்னிடம்தான் பெட்டி, படுக்கை எதுவும் இல்லையே, அது எப்படி முடியும்?

மறுபடியும் என் கைகள் என் உடம்பை, என் உடையைத் தடவிப்பார்த்தன. சட்டையின் உட்புறப் பையினின்றும் ஏதோ முட்டிக்கொண்டிருப்பது தட்டுப்பட்டது. ஒரு பணப்பை, காலத்தால் கலர் இழந்து காணப்பட்டது. நீண்டநாட்கள் தண்ணீரில் கிடந்தது போல் தோன்றியது. நிச்சயமாக இது என்னுடையதல்ல. இம்மாதிரிப் பை ஒன்று வைத்திருந்ததாக எனக்குக் கொஞ்சங்கூட ஞாபகம் இல்லை. பசைமாதிரி ஒட்டிக்கொண்டிருந்த அதன் வாயை மெதுவாகக் கவனத்துடன் கிழித்தேன். நீரில் கிடந்ததால் மை அழிந்து வாசிக்கமுடியாத சில கடிதங்கள். ஒரு சிறு அட்டைப்படம். இதேமாதிரிப் படத்தை, நான் சின்னஞ்சிறு குழந்தையாயிருக்கும் பொழுது ஞாயிற்றுக்கிழமைகளில் காலையில் கிறித்துவ தேவாலயத்தில் வாங்கியிருக்கிறேன். அந்த அட்டைப் படத்தின் பின்புறம் அதே அளவில் ஒரு அழகிய இளம் பெண்ணின் படம் ஒட்டியிருந்தது. கடற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. குளிக்கும் உடையில் அந்த உல்லாசி நின்றுகொண்டு என்னை 'வா' என்றழைப்பதுபோல் இரு கைகளையும் நீட்டிக் கொண்டிருக்கிறாள்.

அந்தப் படத்தை உற்றுப் பார்த்தேன். அந்த அழகியின் இரு கரங்களும் என்னை நோக்கித்தான் விரிந்திருந்தன. என்னை வரவேற்றுக்கொண்டிருந்தாள். நான் எவ்வளவுதான் நினைத்துப்பார்த்தாலும், அந்த அழகியை இதற்குமுன் பார்த்ததாக ஞாபகமே இல்லை. புயலில் பறக்கும் சருகைப்போல, அவ்வளவு எளிதில் அந்த அழகிய உருவம் என் நினைவிலிருந்து மறைந்துவிட முடியுமா? அந்த அழகியின் படத்தை, புனிதமான படத்தின் பின்புறம் ஏன் வைத்தேன்? இவளை நான் திருமணம் செய்துகொள்ள விரும்புவதால் அவ்விதம் செய்தேனோ!

பையை மீண்டும் துழாவினேன். மற்றொரு பகுதியிலிருந்து ஒரு பழைய ரூபாய் நோட்டுக் கிடைத்தது. அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. தண்ணீர் பட்டுச் சிறிது சேதமாகியிருந்தது. வருடக்கணக்கில் கவனிப்பாரற்று அந்தப் பையில் தூங்கிக்கொண்டிருந்திருக்கிறது அந்த நோட்டு. அது மிக அதிக ரூபாய்கள்கொண்ட நோட்டு. இந்த நோட்டு இப்பொழுது பழக்கத்தில் இல்லை. இந்தப் பணம் யாருடையது என்று எனக்குத் தெரியாது. என் கையில் பணம் இல்லாததால் இந்த நோட்டைச் செலவழிக்கலாம் என நினைத்தேன். அருகில் இருந்த உணவு விடுதியிலிருந்து 'கமகம'வென வாசனை அடித்துக் கொண்டிருந்தது. இதுவரை எங்கோ பதுங்கியிருந்த பசி, வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது. உணவு விடுதிக்குள் சென்றேன். விடுதித் தலைவர், பெரிய மனிதர் ஒருவருக்குக் காட்ட வேண்டிய பரிவும், பணிவும் என்னிடம் காட்டினார். என்னைத் தெரிந்தவர்போல ஓடியாடி உபசாரம் செய்தார். ஒருநாற்காலியைக் காட்டி என்னை அமரவேண்டினார். ஆனால் நான் உட்காரவில்லை. என் கையிலிருந்த நோட்டை மாற்றுவதற்காக அவரிடம் பேசினேன். நோட்டு மிகப் பழையதுதான் என்றாலும், என்னைப்போன்ற முக்கியமான, பெரியமனிதர்களுக்கெல்லாம் உடனடியாகத் தடையேதும் இன்றி பாங்கிகள் மாற்றித்தரும் என்று கூறி

ஞர் விடுதித்தலைவர். என்னுடன் கூடவே பாங்குக்கு அவர் வந்தார். அங்கு என் நோட்டைப் பெற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக சிறிய நோட்டுக்கள் அடங்கிய பெரிய கட்டு ஒன்றைக் கொடுத்தார்கள். என் பை கொள்ளவில்லை. உணவு விடுதிக்குத் திரும்பிவந்து உணவு உட்கொண்டேன். இதற்குள் நான் பணம்படைத்தவன் என்ற செய்தி பரவி, நான் விடுதியைவிட்டு வெளியேறியதும், புத்தம் புதிய, பெரிய கார் ஒன்று எனக்காகக் காத்திருந்தது. கார் டிரைவர் தலையிலிருந்த தொப்பியைக் கையில் எடுத்து, வணக்கம் தெரிவித்துக் காரின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தான். நான் ஏறியதும் கார் புறப்பட்டது. கார் எங்கே செல்கிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் கார் ஒன்று இருக்கும்பொழுது, வீடு ஒன்று இருக்கத்தானே வேண்டும் என்று நினைத்தேன். நான் நினைத்தது சரியாகப் போய்விட்டது. ஆம்! எனக்கு ஒரு வீடு இருந்தது. மிகவும் அழகானது. புராதனமானது. இந்தப் பழம்பெரும் வீட்டில் என் முன்னோர்கள் வாழ்ந்திருக்கவேண்டும். எனக்குப்பின் என் சந்ததிகளும் இங்குவாழ்வார்கள். விலையுயர்ந்த இந்த நாற்காலி, மேஜை இவைகள் எல்லாம் என்னுடையவைதானா? இந்த இடத்தை இதற்குமுன் பார்த்ததாக எனக்குக் கொஞ்சம்கூட ஞாபகம் இல்லை. இந்த வீட்டில் நான் ஒரு அந்நியன்போலவே இருக்கிறேன். ஆள், அரவம் எதுவும் இல்லை. வீடு காலியாக இருந்தது. நேற்று இரவு தண்டவாளத்தினருகில் வீழ்ந்துகிடந்தபொழுது எப்படித் தோன்றியதோ, அப்படியேதானிருக்கிறது. என்னை எவ்வளவோ சாந்தப்படுத்த முயன்றும் முடியவில்லை. அறையின் மேலும் கீழும் நடைபோட்டுக்கொண்டிருந்தேன். அறையின் ஒரு கோடியில் இருந்த கதவு தென்பட்டது. அதைத் திறந்துகொண்டு சென்றேன். அது ஒரு படுக்கையறை. காலையில் என் பையில் இருந்த படத்தில் கண்ட அதே அழகி. மஞ்சத்தில் சாய்ந்துகொண்டு என் வரவை எதிர்நோக்கியிருப்பதுபோல், என்னை வரவேற்க இரு கரங்களை நீட்டிக்கொண்டிருந்தாள். கொஞ்சம்கூட சந்தேகமில்லை. அவளேதான்! அந்த அழகி உயிருடன் இருக்கிறாள்.

எங்கே, திடீரென்று மறைந்துவிட்டாளே?

இவை எல்லாம் வெறும் கனவுகள்தானா? —காலையில் நான் எழுந்தபொழுது, அந்த அழகியைக் காணவில்லை. இரவு முழுவதும் இதமாக இருந்த இந்தப் படுக்கை, இப்பொழுது மயானத்தைப்போல காட்சியளிக்கிறது, என்னைத் தனியே தவிக்கவிட்டு அவள் எங்கோ சென்றுவிட்டாள். என்னைச் சுற்றிலும் மயான வாடை அடிப்பதுபோல் ஒரு உணர்ச்சி. பழைய மரச்சாமான்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. நிச்சயமாக இது என்னுடைய வீடாக இருக்கமுடியாது. பயங்கரக் கனவுகளுக்குப் பலியாகிவிட்டேன். எதிர் சுவற்றில் மாட்டியிருந்த கண்ணாடியில் என்னைப் பார்த்தேன். உண்மையாகவா? வயது முதிர்ந்த முகம் என்னுடையதுதானா? நான் எப்பொழுது இவ்வளவு கிழமானேன்? என்னைக் கிழமாக்கியது யார்? திடீரென்று எப்படி மூப்படைந்தேன்? இது நடக்கக்கூடிய காரியமா, அல்லது இதுவும் மற்றொரு கனவா?

கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது. என் குழந்தைகள் என்னைக் காணவந்திருப்பதாக யாரோ கூறுகிறார்கள்.

என் குழந்தைகள்?—என் குழந்தைகள் என்றதுமே எனக்குத் திகிலாயிருந்தது. நான் எப்பொழுது திருமணம் செய்துகொண்டேன்? குழந்தைகள் எப்பொழுது பிறந்தன? நேற்று இளைஞனாக இருந்தேனே, அப்பொழுதா அல்லது......? அப்படியானால் அவர்களைச் சந்தித்து இன்புறுவேன். என் குழந்தைகள், கையில் அவர்களின் குழந்தைகளை ஏந்திக்கொண்டு அறையினுள் நுழைந்தனர். என் அருகில் வந்து, என்னைப்பிடித்து ஒரு சாய்வு நாற்காலியில் உட்காரவைத்துவிட்டு, அவர்களைச் சந்திக்க படுக்கையைவிட்டு எழுந்ததற்காக என்னிடம் குறைப்பட்டுக்கொண்டார்கள். உங்கள் வயதில், இவ்வளவு கஷ்டத்துடன் மிகவும் கவனமாக இருக்கவேண்டுமப்பா என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு எப்படித் தெரியும்? என் வயதைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? நான் தனியாக நிற்கமுடியாது என்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். கிண்டலும்கேலியும் உருவெடுத்து எனக்கு எதிராகச் சதிசெய்வதுபோலிருந்தது.

கேலியும் அல்ல, கிண்டலும் அல்ல; என் வாழ்வின் கடைசிப்பகுதி கழியும் நேரமா இது? என் வாழ்வின் அந்திப்பயணமா?

நான் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். வழிபாட்டில் தலைவணங்குவதுபோல என்முன் தலைசாய்ந்திருந்தனர். திடீரென்று அவர்கள் தலைமயிர் நரைக்க ஆரம்பித்தது. நான் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே ஏற்பட்ட இந்த மாற்றத்தை என்னால் நம்பமுடியவில்லை. நாங்கள் சொல்வது பொய்யல்ல.

அறிவுப்புதிர்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்கள் சரியா, தவறு என்பதை அறிந்து தனித் தனியே குறியிட்டுக்கொள்ளவும். உங்களது விடைகளை 35-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளோடு சரிபார்த்துக் கொள்ளவும்.

1. வானில் சூரியனை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நாம் பார்த்தாலும் உண்மையில் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் சூரியன் இருந்திருக்காது.

சரி...... தவறு......

2. நாம் காற்றிலுள்ள பிராணவாயுவை உட்கொண்டு கரியமிலவாயுவை வெளியிடுகிறோம். கரி, மரம் முதலிய பொருள்கள் எரியும்போது பிராணவாயு கொள்ளப்பட்டு கரியமிலவாயு வெளியிடப்படுகிறது. ஆகவே காற்றில் கரியமிலவாயு அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

சரி...... தவறு......

3. நீர்க் கோர்வை, ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவக்கூடிய ஒரு தொத்து நோயாகும்.

சரி...... தவறு......

பொங்கல் மலர் அறிவிப்பு

விற்பனையாளர்கட்கு :

விற்பனையாளர்கள் பொங்கல் மலருக்குரிய கழிவு நீங்கிய தொகையை உடன் அனுப்ப வேண்டுகிறோம். முன்பணம் அனுப்பாதவர்கட்கு கண்டிப்பாக மலர்கள் அனுப்பப்படமாட்டாது.

சந்தாதாரர்கட்கு :

சந்தாதாரர்கள் பொங்கல் மலருக்கென தனியாக ஒரு ரூபாய் அனுப்ப வேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தனியாக மலர் பெற விரும்பும் தோழர்கள் ரூ, 1—6—0 அனுப்பினால் பதிவு அஞ்சல் மூலம் மலர் அனுப்பிவைக்கப்படும்,

மலரின் விலை உள்நாடு ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4-0

நிர்வாகி,

மன்றம்,

பாருங்கள், எங்கள் தலைமயிர் நரைத்துப்போய் விட்டன. என்று அவர்கள் கூறுவதுபோல் தோன்றுகிறது.

கதவின் அருகில் துள்ளிக்குதித்து ஆடும் அந்தச் சிறுர்களும், சிறுமிகளும்,என் அருகில் வந்ததும் முதியவர்களாயினர். அவர்களில் ஒரு பெண்—சிறுமி இருந்தாள். என் அருகில் வந்தாள். இப்பொழுது பருவமடைந்த குமரியாகிவிட்டாள். என் கழுத்தைக் கட்டிக்கொண்டு, என் நெஞ்சைத் தடவிக்கொடுத்தாள்.

என்னால் பொறுக்கமுடியவில்லை. எழுந்து எங்காவது ஓடிப்போகவேண்டும்போலிருந்தது. என்னால் முடிந்தால்தானே ஓடுவதற்கு!

காதற்கதை கண்டு கவிதை உமிழும் என் கனவுக்கண்கள், இன்று ஒளி இன்றி, வலிவிழந்து இருந்தது. காலத்தின் கோலத்தால் பார்வை குன்றிய என் கண்களின்மூலம், ஆடாமல், அசையாமல் தலை நரைத்து, தளர்ந்த நடையராய் என்முன் மண்டியிடும் அந்தக் குழந்தைகளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

—செல்வன்.

கலப்பு மணக் காதலர்

[எழினி]

அவன் அரசனது மகனாதலால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறான். அழகிலும், அறிவிலும், ஆற்றலிலும் அவனை மிஞ்சுவார் யாருமில்லை என்ற நிலையில் அவன் திகழ்கிறான்.

விரும்பிய வசதிகளையெல்லாம் பெறுவதற்கேற்ற வகையில் அவனுக்குச் செல்வம் குவிந்துகிடக்கிறது. விரும்பிய செயலையெல்லாம் செய்வதற்கேற்ற வகையில் அரச ஆணையிருக்கிறது. எனவே அவன் கவலைக்கிடமில்லாத வகையில் பொலிவோடும் பூரிப்போடும் காலங்கழித்துவருகிறான்.

அவன் வாழும் ஊர் கடற்கரையை அடுத்த பட்டினமாகும். அது மிகப்பழங்காலந்தொட்டுச் சீரோடும் சிறப்போடும் வளர்ந்துவரும் அரசிருக்கை நகரமாதலின், மாடமாளிகைக் கூடகோபுரங்கள் நிறையப்பெற்று, மிகுதியான மக்களைக் கொண்டதாக இருந்துவருகிறது. அல்லும் பகலும் எங்கணும் மக்களின் ஆரவாரமான போக்குவரத்து; பிறநாட்டு வணிகர்கள் வணிகத்தின் பொருட்டு வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள்; பெரும்பெருங் கடைத்தெருக்கள் நகருக்கே தனி அழகைக் கொடுக்கின்றன. கடைத்தெருவிலுள்ள கடைகள் ஒவ்வொன்றும், இன்னின்ன விற்பனைப் பொருள்களைத்தாம் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்த்தும் தனித்தனிக் கொடிகளை ஏந்தியனவாய்ப் பொலிவுற விளங்குகின்றன. இவ்வாறு வாணிகத்திலும், வளத்திலும் சிறந்து காணப்படுகின்றது அக்கடற்கரைப் பட்டினம்.

அரசன் மகன், நகரின் ஆரவாரத்தினின்றும் ஒதுங்கி அமைதியான சூழ்நிலையைப் பெற, மாலைப்பொழுதில், குதிரைமீது சென்று, கடற்கரையின் வெண்மணற்பரப்பில் உலாவிக் கடற்காற்றை நுகர்ந்து தனிமை இன்பம் பெறுவதுண்டு. ஒருநாள் கடற்கரையில் உலாவிக்கொண்டிருக்கும்போது, அழகான பெண்ணொருத்தி கடற்கிளிஞ்சல்களை, குனிந்து பொறுக்கிக்கொண்டிருக்கிறாள். இளவரசன் கிளிஞ்சல் பொறுக்கும் பெண்ணைப் பொது நோக்காக நோக்கிக்கொண்டு மெல்ல நடந்து செல்கிறான். அவன் அவளருகாமையில் நடந்து செல்லும்போது, யார் போவது என்று பொதுவாகப் பார்ப்பதற்காகத் தலை நிமிர்ந்து பார்க்கிறாள். அவள் இளவரசனின் தோற்றப் பொலிவுகண்டு அப்படியே மயங்கி நிற்கிறாள். இளவரசனும் அவளைப் பொதுவாகக் காணத்தொடங்கி, உற்றுப் பார்க்கிறான். அவளது ஒளி உமிழும் கண்களும், பிறைநெற்றியும், கறுத்து நீண்டு நெளிந்த கூந்தலும், நிறப்பொலிவும், தோற்ற அழகும் அவனுள்ளத்தை அப்படியே கவர்ந்துவிடுகின்றன. அவன் அசைவற்ற நெடுமரம்போல் அப்படியே நிற்கிறான். அவளும் அசைவற்று நிற்கிறாள். இருவரின் கண்களும் ஒன்றையொன்று கவ்வி நிற்கின்றன. இளவரசனின் தோழன் தொலைவில் வந்துகொண்டிருக்கிறான். அதற்குள் இளவரசனின் குதிரை இயல்பாகக் கனைக்கிறது. குதிரையின் கனைப் பொலிகேட்டு அவன் திடுக்கிட்டுச் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துவிட்டு மெல்ல மேல் நடக்கத் தொடங்குகிறான். அவன் மேற்கொண்டு நடக்க முயலுகிறானே ஒழிய அவனது கால்கள் அவனைப் பின்பக்கமாக இழுக்கவே செய்கின்றன. தோழனைத் திரும்பிப் பார்ப்பதுபோல் அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கிறான். அவளும் அரசமகனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டேசென்று ஒரே ஓட்டமாக ஓடித் தன் குடிசைக்குள் நுழைந்துவிடுகிறாள். அவள் பரதவர் குடிசையில் நுழைந்ததைக்கொண்டு, அவள் அந்தப் பகுதியில்தான் வாழ்கிறாள் என்பதையும், மீன் வலைஞர் குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதையும் அறிந்துகொண்டு அரச மகன் அரண்மனை நோக்கித் திரும்புகிறான்.

மறுநாள், இளவரசன் தன் தோழனைத் தொலைவில் நிறுத்திவிட்டு, முதல்நாள் அந்த மங்கை நல்லாளைக் கண்டவிடத்திற்கு அவள் இன்றும் வருவாள் என்ற எண்ணத்துடன்

வருகிறான். மறுநாளும் அந்த ஆணழகன் வருவான், அவனை மீண்டும் காணலாம் என்ற பெருவிருப்போடு அவள் முன்கூட்டியே கடற்கரைக்குச் சென்று கிளிஞ்சல் பொறுக்கும் வேலையில் ஈடுபடுகிறாள். அவள் எதிர்பார்த்த படியே அவன் வருகிறான்; அவன் எதிர்பார்த்தபடியே அவள் வந்திருக்கிறாள். இருவரும் ஒருவருக்கொருவர் கண்களைத் தூதனுப்புகிறார்கள். அவன் அவள் அருகாமையில் வருகிறான். அவள் நாணிக் கோணி முகந் தாழ்த்தி நிற்கிறாள். இளவரசன் அவளிடம் பேச்சுக்கொடுத்துத் தனக்குச் சில கிளிஞ்சல்கள் தரும்படி கேட்கிறான். அவளும் விரும்பி சில கிளிஞ்சல்களைத் தருகிறாள். அவன் அவற்றைத் தன் கை அவள் கையோடு படுமாறு வைத்துப் பெற்றுக்கொள்கிறான். கிளிஞ்சல்களுக்குப் பதிலாக அவன் முத்துமாலை ஒன்றை அவளுக்கு அளிக்கிறான். அவளும் அதனைப் பெருவிருப்போடு பெற்றுக்கொள்கிறாள். இப்படியாக நாள்தோறும் இருவரும் அதே இடத்தில் கூடுகிறார்கள். இருவரும் நொதுமலர்களாகப் பழகிப், பிறகு நண்பர்களாகப் பழகிப், பிறகு காதலர்களாகப் பழகி விடுகிறார்கள். அரச இளைஞன் அவளுக்கு நாள்தோறும் விதவிதமான ஆடை அணிகலன்களைப் பரிசாக அளிக்கிறான். அவளும் மகிழ்ந்து பெற்றுக்கொள்கிறாள். பலநாட்கள் வரையில் தலைவன் யாரோ ஒரு செல்வக்குடியில் பிறந்தவன் என்றுதான் தலைவி எண்ணிக்கொண்டிருக்கிறாள். தலைவியின் தோழி கூறியதற்குப் பிறகுதான் தலைவன் இளவரசன் என்பதை அறிந்துகொள்கிறாள். இளவரசன் என்பதைத் தெரிந்துகொண்டதும் அவளின் காதலன்பு மிக உயர்கிறது.

தோழி, தலைவிக்கான எல்லாவகை உதவிகளையும் புரிந்து, தலைவியின் களவொழுக்கத்தைத் தாய்தந்தையர், தமையன்மார் முதலியோர் அறியாவண்ணம் பாதுகாத்து வருகிறாள். தலைவியின் புதுப்புது ஆடைகளையும், அணிகலன்களையும் கண்டு தாய்தந்தையர் வினவினால், இளவரசன் அவற்றைக் கடற்கரையில் பெரும்போக்கில் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறான் என்றும், அவற்றைத் தான் எடுத்துக்கொண்டுவருவதாகவும் தலைவி கூறுவாள். தோழி அதற்குச் சான்று பகர்ந்து அது உண்மை என நிலைநாட்டுவாள்.

இடையில் சிலநாட்கள் அரண்மனையில் ஏற்பட்ட அலுவல்களின் காரணமாக இளவரசன் கடற்கரைக்கு வர இயலாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. தலைவி தலைவனது வரவைக் காணாமல் தன்னை அவன் கைவிட்டு விட்டானோ என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிறாள். அதற்குள், தலைவியின் தாய்தந்தையர் தம்மகள் மணப்பருவம் அடைந்துவிட்டபடியால், இனியும் அவளை வெளியே செல்லவிட்டுக்கொண்டிருப்பது முறையாகாது என்று கருதிக் குடிசையிலேயே இருக்கும்படி செய்துவிடுகிறார்கள். தலைவி தலைவனையும் காணமுடியாமல், வெளியேயும் செல்லமுடியாமல் வருந்திக்கொண்டிருக்கிறாள். தலைவன் எப்பொழுதாவது கடற்கரைக்கு வருகிறானா என்று பார்க்கும்படி தோழியை அவள் நாள்தோறும் கடற்கரைக்கு அனுப்பிவைக்கிறாள்.

பலநாட்கள் கழித்து, ஒருநாள், தலைவன், தலைவியைக் காணும் பெருவிருப்போடு கடற்கரைக்கு வருகிறான். அங்குத் தலைவியைக் காணாமல், தோழியை மட்டும் காண்கிறான். அவளிடம் நெருங்குகிறான். அவளிடம் பேச்சுக்கொடுக்கிறான்.

தலைவன் : (தோழியைப் பார்த்து) "ஏடீ! உன் தலைவி எங்கே? அவள் வரவில்லையா?"

தோழி : (சற்றுச் சினத்துடன்) "அவள் எங்கே இருந்தால் உமக்கென்ன? உம் வேலையைப் போய்ப் பாரும்!"

தலைவன் : "ஏன் இப்படிச் சிடுசிடுவென்றுவிழுகிறாய்?"

தோழி : "பின் ஏன் என்னிடம் பேச்சுக்கொடுக்கின்றீர்?"

தலைவன் : "தலைவி எங்கே என்று உன்னைக் கேட்கக்கூடாதா?"

தோழி : "இவ்வளவு நாட்களாக அவளைப் பற்றி இல்லாத கவலை இப்பொழுது மட்டும் எங்கிருந்து வந்தது?"

தலைவன் : "அரண்மனையில் அலுவல்கள் பல ஏற்பட்டுவிட்டன. ஒய்வு ஒழிவு ஏற்படவில்லை, நான் என் செய்வேன்? இன்று தான் ஒழிவு ஏற்பட்டது! ஓடோடியும் வந்தேன்!"

தோழி : நீர் அவளைப் பார்க்கவேண்டிய தேவையில்லை. உமக்கும் அவளுக்கும் எவ்வகையிலும் பொருத்தமேற்படாது!"

தலைவன் : "ஏன்? அவள் என்னை வெறுத்து விட்டாளா?"

தோழி : "நீரோ அரசரின்மகனாவீர்; அவளோ மீன்வலைஞரின் மகள்! உம்முடைய குலமோ உயர்ந்தது; அவளுடைய குலமோ தாழ்ந்தது! இரண்டு குலத்திற்

கும் எப்படிப் பொருத்தம் ஏற்பட முடியும்?”

தலைவன் : “நான் அவளின் வற்றுக் காதலன்பைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேனேயல்லாமல், அவளது குலத்தைப் பற்றிக் கவலைப்படவில்லையே!”

தோழி : “தலைவியோ கடற்கரைச் சோலையில் சிறு குடிசையின்கண்ணே இருக்கிறவள்; நீரோ பெரிய அரண்மனையில் இருப்பவர்! இருவர்க்கும் எப்படிப் பொருத்தம் ஏற்படமுடியும்?”

தலைவன் : “நான் அவள் குடிசையையும் மாளிகையாக ஆக்கிக்காட்டுவேனே! அவள் அன்பு மட்டும் இருந்தால் அவள் விரும்பும் அனைத்தையும் செய்து காட்டுவேனே!”

தோழி : “நீரோ தேரேறி ஆணைசெலுத்துபவர்; செல்வ மன்னனது அருமை மகனுவீர்! அவளோ காயவைக்கும் சுறுமீன் துண்டுகளைக் காக்கைகள் கவராதவாறு அவற்றை ஓட்டிப் பாதுகாக்கின்ற தொழிலில் ஈடுபட்டவள்; அவள் சுறுத்துண்டுகளைப் பரப்புதலால் புலால் நாற்றம் நாறும் உடலைப் படைத்தவள்! அவள் உமக்கு எவ்வகையிலும் ஒப்பானவள் ஆகாள்!”

தலைவன் : “அவளை நறுமணம் வீசும் நங்கையாக ஆக்கிடும் ஆற்றல் என்னிடத்தில் உண்டு! நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே! நான் அவள் சூழ்நிலையைப்பற்றிக் கவலைப்பட்டதில்லையே! அவள் காதலன்புக்குத்தானே காத்துக் கிடக்கிறேன்!”

தோழி : “அவளோ எளிய தாழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்; நீரோ செல்வமிகுந்த உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்! உமக்கு அவள் ஒருக்காலும் ஒத்துவரத் தக்கவள் அல்லள்!”

தலைவன் : “நீ அவளை என்னோடு சேரவிடு! பிறகு பார் எந்தப் பொருத்தமற்றதன்மை யாவது தென்படுகிறதா என்று!”

தோழி : “அவளைக் களவொழுக்கம் நடத்தத் தானே அழைக்கிறீர்!”

தலைவன் : “ஆமாம்!”

தோழி : “அவளை மணம்புரிந்துகொண்டு இல்வாழ்க்கை நடத்த, பரதவர் குலத்தில் உம்மைப்போன்ற எவ்வளவோ செல்வர்கள் காத்துக்கிடக்கிறார்கள்! நீர் ஒன்றும் களவொழுக்கத்துக்கு அழைக்கவேண்டாம் போம்! அவள் இனி வரமாட்டாள்; அவள் வீட்டில் காவலில் வைக்கப்பட்டுவிட்டாள்!”

தலைவன் : “அவளை நான் இனிக் காணமுடியாதா?”

தோழி : “முறைப்படி திருமணம் செய்துகொள்ள முன்வந்தாலல்லாமல், அவளைக் காணமுடியாது!”

தலைவன் : “அப்படியா......? திருமணத்திற்கான ஏற்பாட்டுடன் வருகிறேன் என்று நீ அவளிடம் சொல்!” என்று சொல்லிவிட்டுத் தலைவன் அகலுகிறான்; தோழியும் அகலுகிறாள்!

∴ ∴ ∴

மேலே தீட்டிக் காட்டப்பட்டிருக்கும் காதற் காட்சி நற்றிணை 45-ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கியதாகும். இது, குறைவேண்டிய தலைவனைத் தோழி சேட்படுத்துதல் என்னும் நெய்தல் திணையின்பாற்பட்டதாகும். இச்செய்யுளை இயற்றிய புலவர் யார் என்று தெரியவில்லை.

இவளே, கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீனெறி பரதவர் மகளே
நீயே, நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ

புலவு நாறுதும் செல்நின் றீமோ
பெருநீர் விளையுளெஞ் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்ம னோரில் செம்மலும் உடைத்தே.

[நற்றிணை—45]

[பொழிப்புரை : உன்னால் காதலிக்கப்படும் இவள்தான், கடற்கரைச் சோலையிடத்தே அமைந்த அழகிய சிறு குடிசையின்கண்ணே யிருக்கின்ற. நீலநிறத்தையுடைய பெரிய கடலும் கலங்குமாறு அதன்மேற் சென்று வலைவீசி மீனைப் பிடிக்கின்ற பரதவரின் மகளாவாள்; நீதானும் நெடிய கொடிகள் காற்றாலசைந்து துவளும் கடைத்தெருக்களையுடைய பழைய ஊரின்கண்ணுள்ள மிக்க விரைவினையுடைய தேரையுடைய செல்வ மன்னனது காதலிற் பெற்று வளர்த்த மகனாய் இருக்கின்றாய்; ஆதலால் குலத்திற்கே பொருத்தமில்லை ; அப்படி மணப்பதாயினும், கொழுப்பையுடைய சுறாமீனை அறுத்திட்ட தசைகளைக் காயவைத்தல்வேண்டி வெயிலில்போட்டு, அத்தசைகளைக் கூட்டமாகிய காக்கைகள் கவராதவாறு அவற்றை ஓட்டிப் பாதுகாக்கின்ற எமக்கு உனது சிறந்த நலந்தான் எவ்வகையில் வேண்டப்படுவதாகும்? ஒருவகையிலும் வேண்டா; சுறாவின் தசைகளை வெட்டிப் பரப்புதலால் நாங்கள் புலவு நாற்றம் நாறுகின்றோம்; இந்நாற்றத்தை நீ பொறுக்கமாட்டாய் ஆதலால் எம் அருகில் வராதே; அகன்றுபோய் நிற்பாய் ; கடல் நீரை விளைவயலாகக் கொள்ளுகின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கையானது உம்மோடு ஒத்த உயர்வுடையதொன்று அல்ல; எம்போன்ற பரதவரில் உன்னைப்போன்ற செல்வமுடையவர்களும் இருக்கவே செய்கிறார்கள் ; எம் மரபு அத்தகையோரை உடையதுதான்.

கானல் - கடற்கரைச்சோலை ; காமர் - அழகு ; நுடங்கும் - துவளும் ; நியமம் - கடைத்தெரு ; நிணம் - கொழுவிய தசை ; இனப்புள் - கூட்டமான பறவை, காக்கைகள் ; ஓம்பும் - விரட்டும்.]

ஃ ஃ ஃ

களவொழுக்க இன்பத்தையே நெடிது நாட்கள் நுகர்ந்துகொண்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும் தலைமகனை, மணந்து கொள்ளும்படி வற்புறுத்த தோழி இச்செய்யுளில் கையாண்டுள்ள முறை நயப்பாடு நிறைந்ததாகும். தலைவியின் அருமையை எடுத்துச் சொல்லி, அவள் தலைவனுக்குக் கிட்டமாட்டாள் என்று சொல்லுவதன் மூலம், தலைவனைத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள வைக்கிறாள் தோழி. தலைவனும் வேறு வழியின்றி இறுதியாகத் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள வேண்டியவனாக ஆகிறான்.

உயர்வு—தாழ்வு, மேல்குலம்—தாழ்குலம், பணக்காரன்—ஏழை போன்ற வேற்றுமை கருதப்படாமல் காதற் கலப்புமணம் பண்டைத் தமிழகத்தில் சிறக்க நடந்துகொண்டிருந்தது என்பதற்கு இது சீறிய எடுத்துக் காட்டாகும்.

மீன்வலைஞர் கடற்கரைச் சோலையில் குடிசை போட்டுக்கொண்டு வாழ்தல், அவர்கள் ஆழ்கடல் சென்று மீன் பிடித்தல், மீன் தசைகளை வெட்டிக் காயவைத்தல், கடைத்தெருவிலுள்ள கடைகளில், அவை என்ன கடைகள் என்பதைக் காட்டும் கொடிகள் கட்டியிருத்தல் போன்ற பண்டைப் பழக்கவழக்கங்கள் அறியப்படுகின்றன.

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஒரு மாதம் கடந்தது. தங்கம் ஆஸ்பத்திரியை விட்டு தன் வீடு வந்தாள், கையை மடக்கி, முன்கை அசையாமலிருக்கக் கட்டப்பட்ட கட்டும், விலாவில் கட்டப்பட்ட கட்டும்; அவள் உடல் இன்னும் சீரடையவில்லை என்பதைக் காட்டின. அவளுடைய உடல் மிகப் பலவீனமான நிலையிலிருந்தது. காலை, மாலையில் சிறிதுநேரம் தன் படுக்கையை விட்டு, எழுந்து அவள் நடமாடுவாள். பொழுதின் பகுதியை படுத்தபடியே அவள் கழித்தாள். படிப்பதோ, பேசுவதோ அதிகம் கிடையாது.

காலை ஏழுமணிக்கு நாள்தோறும், டாக்டர் சஞ்சீவியும், சகுந்தலாவும்—சகுந்தலா டாக்டர் சஞ்சீவியின் வீட்டில் தங்கியிருந்தாள்—வருவார்கள். அரைமணி நேரத்துக்குக் குறையாமல் பேசிக்கொண்டிருந்துவிட்டு டாக்டர் சஞ்சீவி போய்விடுவார். சகுந்தலா அங்கு தங்கியிருப்பாள். மாலையில் டாக்டர் சஞ்சீவியும், குலசேகரனும் வருவார்கள்.

கமலநாதன் மாடிப்பக்கம் வருவதில்லை, டாக்டர் சஞ்சீவி வரும்பொழுது, அவருடன் பேசிக்கொண்டேவந்து, தங்கத்தின் பின்புறம் நின்றுகொண்டிருப்பான். டாக்டர் சஞ்சீவி கிளம்பும்பொழுது அவனும் கீழே வந்துவிடுவான். தங்கத்தின்முன் அவன் நிற்பதில்லை.

கமலநாதன் மிகவும் இளைத்துப் போயிருப்பதை டாக்டர் சஞ்சீவி கவனித்தார். "கமலநாதன்! மிகவும் இளைத்து இருக்கிறாய்? பூரண ஓய்வு எடுத்துக்கொண்டு, நீ உன் உடலைப் பார்க்கவேண்டும்!" என்று அவர் சொன்னார்.

"நான் இரண்டுமாதம் விடுமுறையில்தான் இருக்கிறேன்."

"விடுமுறை மாத்திரம் போதாது, ஓய்வு எடுக்கவேண்டும்! நன்றாகச் சாப்பிடு! தங்கத்தின் உடல்நிலை திருந்திவருகிறது! அதைப் பற்றி அனாவசியமாகக் கவலைப்பட்டு, உன் உடல்நிலையைப் பாழ்செய்துகொள்ளாதே! அவள் எழுந்து நடமாட ஆரம்பித்ததும், உன்னைப் படுக்கையில் போடவேண்டிய நிலை வந்துவிடக்கூடாது."

டாக்டர் சஞ்சீவி போனதும், கமலநாதன் கண்ணாடிமுன் நின்று உற்றுப் பார்த்தான். டாக்டர் சொன்னது உண்மைதான். அவன் கண்கள் ஒடுங்கி, கன்னங்கள் குழி விழுந்திருந்தன. பகல் முழுவதும் தனது அறையில் அவன் பேசாமல் உட்கார்ந்திருப்பான். இரவில் நீண்டநேரம்வரை உலவிக்கொண்டிருப்பான்.

நடுநிசியில் விழிக்கும்போதும், கீழே விளக்கு எரிந்துகொண்டிருப்பது தங்கத்திற்குத் தெரியும். சிலசமயங்களில், காலடிச் சத்தம் மாடிப்படிகளின்மேல் ஏறிவருவது கேட்கும். அவளுடைய அறைக்கதவருகே வந்ததும் நின்றுவிடும். தங்கம் பயத்துடன் காத்திருப்பாள். மறுபடியும் காலடிச் சத்தம் மாடிப்படிகளில் கீழிறங்கிவிடும்.

ஏன் இரவு நேரத்தில் உலவிக்கொண்டிருக்கிறார்? தனது அறையை நோக்கி வந்துவிட்டுப்போவானேன்? தங்கம் மிக அச்சத்துடன் தனது மேஜை விளக்கைப் போட்டு, உட்கார்ந்திருப்பாள். அவளுடைய படுக்கையருகே படுத்திருக்கும் பொன்னம்மாள் எழுந்து பார்க்கும்பொழுது, தங்கம் நடுக்கத்துடன் இருப்பாள்.

"தூக்கம் வரவில்லையா?"

"ஆமாம், பொன்னம்மா. அறைக்கதவைத் தாழ்ப்பாள் போட்டிருக்கிறாயா?"

" போட்டிருக்கிறேன்."

" காலையில் பனி அடிக்கும்பொழுது குளிர் இருக்கும் அதனால் சொன்னேன்."

" ஜன்னல் கதவையும் சாத்திவிடட்டுமா?"

" வேண்டாம், நீ படுத்துக்கொள்!"

காலை வெளிச்சம் வருகிறவரை சிலசமயங்களில் தங்கம் உறங்குவதில்லை, வரவர, இரவில் நடமாடுகிற காலடிச்சத்தம், அவளுக்குப் பயத்தைக்கொடுக்காவிட்டாலும், வேதனையாக இருந்தது.

அன்று காலை டாக்டர் சஞ்சீவி வரும்பொழுது தனியாக வந்தார். அந்த அறைக்குள் அவர் வருவது, காலையில் சூரியன் வருவதைப்போலிருந்தது. சிரித்த முகத்துடன், கனிந்த பார்வையுடன் அவர் உள் நுழைவது தங்கத்திற்குத் தனிவலுவைக் கொடுத்தது.

" எப்படியிருக்கிறது?"

" நன்றாயிருக்கிறேன்."

" இல்லை, முகம் சோர்வாக இருக்கிறதே! இரவில் சரியாகத் தூங்குவதில்லையா?"

" இரவு தூக்கம் வரவில்லை."

" கூடாது, கூடாது! தூக்கம் சரியாக இல்லையானால், மறுபடியும் பலவீனம்......! நீயும் ஒரு டாக்டர் நான் அதைப்பற்றி அதிகம் சொல்லவேண்டாம்!"

" குளிர் அதிகமாக இருக்கிறது."

" குளிர் இருந்தால், தூக்கம் நன்றாக வரும்! ஆஸ்பத்திரியில் இருந்தபொழுது நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாயே? மீண்டும் உன்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடட்டுமா?"

" வேண்டாம், வேண்டாம்!"

" இல்லையானால், என் வீட்டுக்கு வந்துவிடு! சகுந்தலா உனக்கு எப்பொழுதும் துணையாக இருப்பாள்."

" சகுந்தலா உங்களுடன் வரவில்லையே, ஏன்?"

" சகுந்தலாவா? காலையில் குலசேகரன் வந்திருந்தார். அவருடன் சென்றாள்! உனக்குத் தெரியாதா?"

" என்ன தெரியாதா?"

" குலசேகரனுக்கும் சகுந்தலாவுக்கும்..."

" குலசேகரனுக்கும் சகுந்தலாவுக்கும், என்னவாம்?"

"அவர்களுக்கு திருமணம் ஆகப்போகிறது."

தங்கம் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தாள். " உண்மையாகவா!"

" உனக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். நீ நன்றாக நடமாட ஆரம்பித்ததும், அவர்களின் திருமணநாள் குறிக்கப்பட்டுவிடும்."

" என்னால் நம்பமுடியவில்லை."

" ஏன்?"

" இல்லை, எதிர்பார்க்கவில்லை."

" அப்படி வேண்டுமானால் சொல்!"

டாக்டர் சஞ்சீவி போய் வெகுநேரம் கழித்தும், தங்கம் புன்னகை செய்தபடி இருந்தாள். கடந்த நிகழ்ச்சிகளை நினைக்கும்பொழுது, அவர்கள் ஒருவரையொருவர் காதலித்திருக்க வேண்டும்!

சகுந்தலாவின் வழக்கை எடுத்துக்கொள்வதற்கு முன்பே இருவரும் சந்தித்திருக்கிறார்களா? சொல்லமுடியாது. ஆனால் யார் கண்டது! காதலின் நேரத்தை, காலத்தை யாரால் அளவிட முடியும்?

தங்கத்தின் நினைவு இன்னும் பின்னோக்கி ஓடியது. தான் காதலித்ததுகூட, அதை யார்தான் எதிர்பார்த்திருக்கமுடியும்? வேலூரில் அவள் குடியிருந்த இடம், எதிர் மாடிவீடு, தோட்டம், அங்கு கமலநாதனின் தந்தை நோய்வாய்ப்பட்ட நிலையில், அங்கு கமலநாதனை அவள் சந்தித்தது! பின் காதல் கடிதங்கள்!

தங்கம் எழுந்துவந்து தன் பெட்டியைத் திறந்து, பழைய கடிதங்களை எடுத்துவந்து படித்தாள்! எவ்வளவு ஆர்வம், கனிவு, காதல், அந்த எழுத்துக்களில் உறைந்திருந்தன! அந்தக் கடிதங்களை எழுதியவர்தான்......தங்கத்தால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. என்ன நடந்தது, அந்தக் காதலை விரட்டியடிக்க? வாழ்க்கையில் என்ன நேர்ந்தது, பெரும் மாற்றத்தை உண்டாக்கவல்ல, காதலிருந்த இடத்தில் கடும் வெறுப்பை மூட்டவல்ல சம்பவம்? தங்கம் நெடுநேரம் தனக்குள் கேட்டுக்கொண்டிருந்தாள்.

சகுந்தலா வந்து பின்புறம் நிற்பதைக்கூட கவனியாமல், மாலை வெய்யல் தோட்டத்தின்

மீது பரவியிருப்பதைப் பார்த்தபடி தங்கம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.

"அந்த மல்லிகைச்செடி பூக்க ஆரம்பித்து விட்டது" என்று சகுந்தலா பேச்சை ஆரம்பித்தாள்.

திரும்பிப் பார்க்காமல், சகுந்தலாவின் கையைப் பற்றியவண்ணம், "சேகரனை எங்கே காணோம்?" என்று தங்கம் கேட்டாள்.

"யாரை?" சகுந்தலாவுக்கு முதலில் புரியவில்லை.

"குலசேகரனைத்தான்!"

சகுந்தலா பேசாமல் நின்ருள்.

"இப்படி என் முன்னல் வா!" என்று தங்கம் அவள் கைப்பற்றி இழுத்தாள். சகுந்தலா நாணத்துடன் பக்கத்தில் கீழே உட்கார்ந்தாள்.

"உங்களிடம் சொல்லவேண்டுமென்றுதான் நாங்கள் இருக்கிருேம், உங்களுடைய உடல் நலமானதும்......!"

"அப்படியானல், நான் படுக்கையிலேயே இருந்திருந்தால், நீங்கள் சொல்லி இருக்கவே மாட்டீர்களா?"

"அப்படியல்ல, உங்களுடைய உடம்பு நன்ருனதும், சொல்லலாம் என்று அவர்......"

"சீக்கிரம் நாள் வைக்கவேண்டியதுதான்!"

"உங்களுக்கு யார் சொன்னது?"

"அதுதான் ரகசியம்! நீங்கள் இவ்வளவு ரகசியமாக — எங்களுக்குத் தெரியாமல்— ஒன்றை வைத்திருந்தபொழுது, நான் மட்டும் உடனே சொல்லிவிடவேண்டுமா? சரி, எப்பொழுதிருந்து......" தங்கம் ஆரம்பித்தவள் நிறுத்திக்கொண்டாள்.

சகுந்தலா படுக்கையைச் சரிசெய்து, விளக்கைப் போட்டாள்.

"விளக்கு வேண்டாம்!" என்று தங்கம் உட்கார்ந்திருந்தாள். அங்கிருந்து பார்த்தால், கீழே தோட்டத்தில், ஒரு மரத்தடியில் கமலநாதன் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. வரவர இருள் கவிழ்ந்தது, உட்கார்ந்திருந்தது நிழ லுருவமானது, பின் சிறுகச்சிறுக இருளில் மறைந்தது, கடைசியாக ஒன்றுமே இல்லாமற் போய்விட்டது.

காதலின் கதியும் அதுதானே? சிறிது சிறிதாகக் கருகி இல்லாமற் போய்விடுவது. உலகில் எதுவுமே உறுதியாக நிற்காதா? தங்கத்தின் கண்களில் நீர்த்துளி படர்ந்தது.

துயரத்துடன் தங்கம் உட்கார்ந்திருப்பதை சகுந்தலா பார்த்துக்கொண்டிருந்தாள். பெருமூச்சுவிட்டு, முகத்தைத் துடைத்துக்கொண்டு எழும்பொழுது, சகுந்தலா உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதை தங்கம் கண்டாள்.

"ஏதாவது வேண்டுமா?" என்று மெதுவாக, இழுத்தாற்போல் சகுந்தலா கேட்டாள்.

"ஒன்றும் வேண்டாம்! நாழியாகிவிட்டது, நீ வேண்டுமானல் போ! சகுந்தலா! ஒன்று மட்டும் சொல்லுகிறேன். காதல் கிடைப்பது கடினம். கிடைத்ததும், அதைப் பாதுகாப்பது அதைவிடக் கடினம். எதிர்பாராத விதத்தில் வருவதுபோல, எதிர்பாராத விதத்தில் போய் விடக்கூடும்."

தங்கம் சொல்வதின் முழுப்பொருளை சகுந்தலாவால் தெரிந்துகொள்ளமுடியவில்லை.

"எப்படியிருக்கிருய்?" என்று கேட்டுக்கொண்டு குலசேகரன் உள் நுழைந்தான்.

"சேகர்! எனது வாழ்த்துக்கள்!" என்று தங்கம் சிரித்தாள்.

குலசேகரன் தங்கத்தையும், சகுந்தலாவையும் மாறி, மாறிப் பார்த்துவிட்டுச் சிரித்தான். "உனக்கு யார் சொன்னது?"

இல்லையென்று சகுந்தலா தலையசைத்தாள்.

"அப்படியானல், டாக்டர் சஞ்சீவிதான் சொல்லியிருக்கமுடியும். சரிதானு?"

"ஆமாம், இருந்தாலும் நீ கெட்டிக்காரன் தான், சேகர்!"

சகுந்தலா பெருமையுடன் கடைக்கண்ணுல் பார்த்துக்கொண்டாள்.

"சேகர்! கல்யாணத்தைச் சீக்கிரமே வைத்துக்கொண்டால், என்ன?"

"அவசரமென்ன, உனக்கு உடல் நலமாகட்டும், தங்கம்!"

"அதற்காகக் காத்திருக்கவேண்டாம்! சேகர்! நாளைக் காலை டாக்டர் சஞ்சீவி வரும்பொழுது கேட்டுவிடலாம்."

"உன் உடம்பு சரியானநிலை அடைகிறவரை ஒன்றும் அவசரமில்லை! டாக்டர் நாகசாமி என்ன சொன்னர்?"

"அடுத்தவாரம் கட்டைப் பிரித்துப் பார்க்கலாம் என்ருர்!"

குலசேகரன் இறங்கிக் கீழே போனான். அவனைத் தாண்டிக்கொண்டு கமலநாதன் மேலே வந்தான். கமலநாதனைப் பார்ப்பதற்கு பித்துப் பிடித்தவனைப்போலிருந்தது.

கமலநாதன் ஹாலைத் தாண்டும்பொழுது அங்கிருந்த அலமாரியைச் சகுந்தலா துழவிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் என்ன செய்துகொண்டிருக்கிறாள்? கமலநாதன் நின்று பார்த்தான்,

சகுந்தலா கதவைத் திறந்து, உட்பெட்டியை இழுத்து, வட்டமான பெட்டியை எடுத்தாள். அது தங்கத்தின் நகைப்பெட்டி!

யாருமில்லாத வேளையில் திருட்டு என்று நினைத்து கமலநாதன் முன்வந்தான்.

நகைப் பெட்டியைப் பக்கத்தில் வைத்து விட்டு அடியில் வேறு சாமான்களைச் சகுந்தலா துழவினாள். கடைசியாக ஒரு தோற்பையை அவள் வெளியே எடுத்தாள்.

தோற்பை! கமலநாதனின் கண்கள் விரிந்தன! அதே பை, முன்பு கடிதங்களைக் கமலநாதன் கண்டெடுத்தானே, அதே பைதான்! அந்தப் பையை இவள் ஏன் எடுக்கிறாள்? தங்கம் எடுத்துவரச் சொல்லியிருப்பாள்!

சகுந்தலா அலமாரியை மூடிவிட்டுத் திரும்பினாள்.

"அந்தப் பையைக் கொடு!" என்று கமலநாதன் அதட்டினான். சகுந்தலா திடுக்கிட்டு நின்றாள்.

"பையைக் கொடுக்கிறாயா, இல்லையா?"

சகுந்தலாவுக்கு இப்பொழுதுதான் உணர்வு வந்தது. "என்ன?"

"அந்தப் பை?" கடுமையுடன் கமலநாதன் முன்னால் வந்து வழியை மறைத்து நின்றான்.

"அதில் கடிதங்கள்......" என்று சகுந்தலா குழறினாள்.

"ஆமாம். இங்கே கொடு!"

"முடியாது!" என்று ஓடுவதற்குச் சகுந்தலா திரும்பினாள். ஒரு தாவுதலில் கமலநாதன் பக்கத்தில் நின்றான்.

"ஐயோ!" என்று சகுந்தலா கூச்சலிட்டாள்.

"சத்தம் போடாதே! பேசாமல் கடிதங்களைக் கொடுத்துவிடு."

"இல்லை, என் கடிதங்களைக் கொடுக்கமாட்டேன்."

"என் கடிதங்கள்......?" கமலநாதன் தோற்பையைத் தட்டிக் கடிதங்களை உதிர்த்தான். "இந்தக் கடிதங்கள்......"

"என்னுடைய கடிதங்கள்! நீங்கள் தொடக்கூடாது" என்று சகுந்தலா கை நடுக்கத்துடன் கடிதங்களைப் பொறுக்கினாள்.

கமலநாதனின் முகம் பயங்கரமடைந்தது, பார்வையிழந்த மனிதனைப்போல, அவன் அப்படியே நின்றான்.

கடிதங்களைப் பொறுக்கியெடுத்துக் கொண்ட சகுந்தலா கீழே ஓடினாள்.

சத்தம் கேட்டு தங்கம் தன் படுக்கையில் புரண்டு பார்த்தாள். கட்டிலுக்குப் பக்கத்தில் கமலநாதன் விழுந்துகிடந்தான். தங்கம் திடுக்கிட்டு, கீழே இறங்கி, அருகில் அமர்ந்தாள்.

"இல்லை, நான் குற்றவாளி! கொலைகாரன்! என்னை மன்னித்துவிடு! மன்னித்துவிடு! தங்கம்!" என்று புலம்பியபடி கமலநாதன் புரண்டான். சித்தங்கலங்கியவனைப்போல.

தங்கம் நகர்ந்துபோய், அருகில் உட்கார்ந்து, அவன் கையைப் பற்றினாள். "இல்லை, வேண்டாம்! நான் கொலைகாரன்!" என்று முகத்தைக் கையால் மூடிக்கொண்டபடி கமலநாதன் கதறினான்.

தங்கம் அவன் கைகளைத் தள்ளி முகத்தை வருடினாள். கமலநாதனின் கண்களிலிருந்து வழிந்த நீரை அடக்கமுடியவில்லை.

"இதோ! பாருங்கள்!" என்று கீழே குனிந்து தங்கம் மொழிந்தாள்.

"இல்லை! நான் கொலைகாரன்!" என்று எழுந்துபோக கமலநாதன் முயன்றான்.

தங்கம் அவனது வாயை மூடி, "அப்படிச் சொல்லாதீர்கள்! நீங்கள்—என் காதலர் எப்பொழுதும் கொலைகாரராக முடியாது!" என்றாள்.

"காதல்—அதைக் கொன்றுவிட நான் முயன்றேன்! மாபாவி!"

"காதலை கொன்றுவிட முடியாது. இதோ! என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. சற்று......" என்று தங்கம் பெருமூச்சு விட்டாள்.

கமலநாதன் அவளைத் தூக்கிக்கொண்டு போய், படுக்கையில் அமர்த்தினான். அவளு

டைய ஒருகை அவன் கழுத்தை வளைத்திருந்தது.

“ நான்...வந்து...தெரியாமல் செய்துவிட்டேன். அந்தக் கடிதங்களைப் பார்த்ததும்...”

“ எந்தக் கடிதங்களை ?” தங்கத்திற்கு ஆச்சரியமாக இருந்தது,

“ தோற்பையிலிருந்த கடிதங்கள் ! சற்று முன் சகுந்தலா எடுத்துச் சென்றாளே, அவைகள்தாம் !”

“ சகுந்தலாவின் கடிதங்களா ?......அவள் கொடுத்தது கடிதங்களா ? நான் பார்க்கவில்லை.”

“ அந்தக் கடிதங்களை நான் பார்த்ததும், உனக்கு வந்ததென்று நினைத்து......”

“ சகுந்தலா கொடுக்கும்பொழுது எனக்குத் தெரியாது. குலசேகரன் அவளுக்கு எழுதியதாக இருக்கும்.”

“ யார் ? குலசேகரன் சகுந்தலாவுக்கா ?”

“ ஆமாம் ! உங்களுக்குத் தெரியாது. அவர்களின் திருமணம் விரைவில் நடைபெறப் போகிறது.”

“ குலசேகரன் சகுந்தலாவை......” கமலநாதனுக்குப் புதுமையாக இருந்தது.

“ காதலிக்கிறான், திருமணமும் செய்து கொள்ளப்போகிறான.”

“ அவளையா ?”

“ ஏன் ?”

“ கமலநாதன் ஏதோ சொல்ல வாயெடுத்தவன் நிறுத்திக்கொண்டான்.

“ தெரிகிறது. வழக்கில் அவளைப்பற்றி தெரிந்த பின்னும், சட்டத்தின்முன் சகுந்தலா குற்றவாளியாக இருந்தபோதிலும், காதலின் கண்களுக்கு—தூய்மையின்முன் அவள் குற்றமற்றவள்.”

“ குலசேகரன் அவளுக்கு எழுதிய கடிதங்கள் அவை—வேடிக்கைதான்.”

“ இதோ! பாருங்கள் எனக்கு வந்த கடிதங்களை ” தலையணைக்குக் கீழே இருந்த கடிதங்களை தங்கம் தள்ளினாள். “ இவற்றைப் படியுங்கள் ! நான் கேட்கிறேன் !”

கமலநாதன் முதல் கடிதத்தைத் திறந்தான். அவனுடைய கையெழுத்து, முதலில் எழுதிய கடிதம், அதைப் பார்க்கும்பொழுது பழைய நினைவுகள்—களங்கமற்ற முன்னைய காதல் வந்தது, அவன் நாக்குத் தழதழத்தது, எழுத்துகள் மங்கின.

“ மேலும் படியுங்கள் !”

“ கமலநாதன் கண்ணைத் துடைத்துக் கொண்டு இரண்டாவது கடிதத்தை எடுத்தான். பின் அதற்கடுத்த கடிதம். மிக நீண்ட கடிதம்! அவற்றை எழுதும்பொழுது, எவ்வளவு குதூகலத்துடன், ஆர்வத்துடன் இருந்தான் ! கடைசிக் கடிதம்—திருமணத்திற்கு முதல்நாள் அவன் எழுதியது.

கமலநாதன் படித்து முடித்ததும், தங்கம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அவள் உதட்டில் புன்னகை தவழ்ந்துகொண்டிருந்தது போர்வையை விரித்து, அவள் உடம்பை முழுவதும் போர்த்திவிட்டுக் கமலநாதன் பக்கத்தில் உட்கார்ந்து, அவளை—களங்கமற்ற அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான், அப்படியே உறங்கிவிட்டான்.

சத்தங்கேட்டு கமலநாதன் விழித்தான். நடுநிசி தங்கம் நாற்காலியின் பக்கத்தில் உட்கார்ந்து, அவன்மீது சாய்ந்திருந்தாள்.

“ ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய் ?” என்று அவளை எழுப்பினான். பதில் சொல்லாமல் குழந்தையைப்போல் சிரித்தாள். கமலநாதன் அவளைத் தூக்கி, நிறுத்தினான். அவள் உடலில் அனல் பறந்தது, நிற்கமுடியாமல் அவள் துவண்டு விழுந்தாள்.

கமலநாதன் பதறிப்போய் “ என்ன, தங்கம்! உடல் கொதிக்கிறதே !” என்று கூவினான்.

“ ஒன்றுமில்லை ” தங்கம் பேசமுடியாமல் மூச்சுத் திணறினாள்.

“ டாக்டரைக் கூப்பிடுகிறேன். இரு !” என்று அவளைப் படுக்கையில் அவன் உட்கார வைத்தான்.

“ வேண்டாம், இனிப்பயனில்லை ” பேச்சு மெதுவாக வந்தது.

“ பேசாமல் படுத்திரு !” என்று கமலநாதன் திரும்பினான்.

“ ஐயோ ! என்னைத் தனியே விட்டுப்போகாதீர்கள் !” என்று தங்கம் கூச்சலிட்டாள்.

கமலநாதன் பயத்தால் நடுங்கி, அவள் அருகில் உட்கார்ந்தான்.

" என்ன பண்ணுகிறது, தங்கம், சொல்லேன் ?"

" செத்துக்கொண்டிருக்கிறேன்."

" அப்படிச் சொல்லாதே! நீ சாகமாட்டாய்!"

" நானும் அப்படித்தான் ஒவ்வொரு நோயாளிக்கும் சொல்வது வழக்கம். ஆனால் என்னையே நான் ஏமாற்றிக்கொள்ளமுடியாது. கடைசியாக......"

தங்கத்தின் மூச்சுத் திணறியது.

" தங்கம்! நீ சாகமாட்டாய், சாகக்கூடாது. உன்னை நான் காதலிக்கிறேன். நீ சாகமாட்டாய்."

தங்கம் புன்னகையுடன் அவனது கையை எடுத்து தன்மீதுபோட்டு அணைத்துக்கொண்டாள். அவளால் மேற்கொண்டு பேசமுடியவில்லை. " நானும் காதலிக்கிறேன். கடைசியாக, இழந்ததைப் பெற்றேன். எங்கே......?" அவள் தலை அவன் தோள்மீது சாய்ந்தது. மூச்சுத் திணறியது, கைகள் சோர்ந்தன.

" தங்கம், தங்கம் !" என்று கமலநாதன் போட்ட சத்தத்தில் பொன்னம்மாள் மேலே வந்தாள்.

சிறிது நேரத்துக்கெல்லாம் டாக்டர் சஞ்சீவி வந்தார். தங்கம் ஏதோ புரியாதபடி உளறிக்கொண்டிருந்தாள். ஊசியின்மூலம் மருந்தைச் செலுத்தும்பொழுது, டாக்டர் சஞ்சீவியின் கைகள் நடுங்கின. பிரமை தட்டியவன்போல கமலநான் உட்கார்ந்திருந்தான்.

விடிவு தலைதூக்கும்பொழுது, தங்கம் கண் விழித்தாள், கமலநாதன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அருகில் உட்கார்ந்தான்.

" இதைப் படியுங்கள் !" என்று தன் கடிதங்களைத் தங்கம் கொடுத்தாள்.

" நான் உன்னைக் காதலிக்கிறேன் !" முதல் கடிதத்தின் ஒரே வாக்கியம் ! அதைக் கேட்டதும் தங்கம் புன்முறுவல் செய்தாள். புன்னகையில் பிரிந்த இதழகள் மூடவில்லை. தங்கம் இறந்துவிட்டாள்.

(தொடரும்)

மூக்குக் கண்ணாடி

மூக்குக்கண்ணாடி கண்ணுக்கான கண்ணாடியாக இருந்தபோதிலும், தமிழகத்தில் அது பலநாட்களாக மூக்குக்கண்ணாடி என்றே வழங்கப்பெற்று வருகிறது.

மூக்குக்கண்ணாடி எப்பொழுது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்று திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடியாவிட்டாலும், அது பற்றிய தொன்மைக் குறிப்புக்கள் சில ஆங்காங்கு கிடைக்கப்பெறுகின்றன.

இத்தாலியில், திரிவிசோ என்ற இடத்திலுள்ள ஒரு கோயிலில், கி. பி. 1352-இல் தீட்டப்பட்ட ஓவியம் ஒன்றில், ஒரு பாதிரியார் மூக்குக்கண்ணாடியின் உதவியால் ஏடு ஒன்றைப் புரட்டிப்பார்ப்பதுபோல் வரையப்பட்டிருக்கிறதாம். இரண்டு கண்ணாடிகள் இரண்டு கைப்பிடிகளில் பொருத்தப்பட்டு, இரண்டு கைப்பிடிகளும் ஒரு ஆணியால் பொருத்தப்பட்டிருக்கிறதாம். மூக்குக்கண்ணாடி பற்றிப் படத்தில் காட்டப்பட்டுள்ள மிகப்பழைமையான சான்று இதுவெனக் கூறப்படுகிறது.

கி. பி. 1214-க்கும் 1294-க்கும் இடையில் வாழ்ந்த ரோசர் பேக்கன் மூக்குக்கண்ணாடியின் உதவிகொண்டு படிப்பதைப் பற்றிய குறிப்பு ஒன்றினை தம் நூலில் கூறியுள்ளார். ரோசர் பேக்கன்தான் மூக்குக்கண்ணாடியைக் கண்டுபிடித்தார் என்று சிலர் சொல்லுகின்றனர்.

பிளாரன்டைன் பாதிரியாரான அலெக்சாண்டர்-டி-சிபைனு என்பவர் 1285-ல் மூக்குக்கண்ணாடியைக் கண்டுபிடித்ததாக வேறு சிலர் கூறுகின்றனர்.

வாணவேடிக்கை

வாணவேடிக்கை என்றாலே எல்லோர்க்கும் மகிழ்ச்சிதான்! வாணவேடிக்கை பார்க்க இளையோரும் முதியோரும், ஆடவரும் பெண்டிரும், பாமரரும் படித்தவரும் விழுந்தடித்து ஓடுவதை எங்கும் பார்க்கலாம்!

வெடியோசை கிளப்பி, வண்ண ஒளி உமிழ்ந்து, வேடிக்கையாக விளங்கும் ஒரு வகைப் பொருளே பொதுவாக வாணம் என்று அழைக்கப்படுகிறது. வாணங்களை ஆங்கிலத்தில் 'பயர்ஒர்க்சு' (Fire works) என்று அழைப்பர்.

மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் இந்தியாவும், சீனாவுந்தான் வாணவேடிக்கை காணும் வாய்ப்புகளை ஏராளமாகக்கொண்டிருக்கின்றன. திருமணம் போன்ற தனி விழாக்களின்போதும், தீபாவலி, கார்த்திகை, கிருத்துமசு போன்ற சமயவிழாக்களின்போதும், கோவில் திருவிழாக்களின்போதும் வாணவேடிக்கை கண்டு மகிழும் வழக்கம் இந்த இரு நாடுகளிலும் மிகவாக இருக்கக் காணலாம். பொதுவாக மக்கள் ஏராளமாகக் கூடும் வாய்ப்புள்ள விழாக்களின்போது, இரவுக்காலங்களில், கட்டாயம் வாணவேடிக்கை இருந்தே தீரும். வாணவேடிக்கை இல்லாவிட்டால் விழா அவ்வளவு சிறப்பாக முடிந்ததாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். "ஒன்றரைக்காசில் கல்யாணமாம், அதில் ஒரு வாணவேடிக்கையாம்" என்ற பழமொழி வாணவேடிக்கையின் சிறப்பை வெளிப்படுத்தும்.

வாணவேடிக்கை முதன்முதல் எங்கு எப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது என்று திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறமுடியவில்லை என்றாலும், அது கீழை நாடுகளில் தான் முதன்முதல் முறையாகத் தோன்றியிருக்கக்கூடும் என்று எண்ணவேண்டியிருக்கிறது. வாணங்களைச் செய்யும் பழக்கத்தை இந்தியா, சீனா ஆகிய இருநாடுகளும் தொன்று தொட்டுப் பழக்கத்தில் கொண்டுவந்திருக்கின்றன.

தீயை எரியவிட்டு அதனை வேடிக்கை காண்பது என்பது காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே இருந்துவருகிறது. இருளில் ஒளி தோன்றுவது என்பதே வேடிக்கை தருவதாகும்; அதுவும் விதவிதமாக ஒளி தோன்றுவது அதைவிட வேடிக்கை பயப்பதாகும்; அதுவும் வண்ணங்களோடு கூடிய ஒளியாகத் தோன்றுவது அதைவிட வேடிக்கை விளைப்பதாகும்; அதுவும் வெடியோசை கிளப்பி வண்ண ஒளியாகத் திகழ்வது அதைவிட வேடிக்கை தருவதாகும். இப்படி நெருப்பைக் கொண்டு வேடிக்கை செய்து மகிழ்வது காட்டுமிராண்டிக்காலத்திலிருந்து இக்காலம் வரையில் படிப்படியாக வளர்ந்து வந்திருக்கிறது.

தீப்பந்தங்களைக் கையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுவதும், அவற்றைச் சுழற்றி எறிந்து வேடிக்கை பார்ப்பதும், காடுகளையும் மாற்றார் ஊர்களையும்—உடைமைகளையும் எரியவிட்டு வேடிக்கை பார்ப்பதும், உப்பு வகைகளும், கந்தகம் போன்ற பொருள்களும் நெருப்புப்பட்டு விதவிதமாக எரிவதைக் கண்டுகளிப்பதும் பழங்காலந்தொட்டே இருந்துவருகின்றன. அறிவியல் அறிவு பெருகப்பெருக வெடிமருந்துகள் கண்டுபிடிப்பும், வண்ணங்கள் கண்டுபிடிப்பும் வளர்ந்து வளர்ந்து, அவை இப்பொழுது வியப்புக்குரிய நிலையை அடைந்திருக்கின்றன. அதிர்வெடி, யானை வெடி, வானவெடி, பீரங்கிவெடி, பட்டாசு வெடி, ஆளையடித்தான் வெடி, கேப்பு வெடி, பச்சை மத்தாப்பு, சிவப்பு மத்தாப்பு, பூத்திரி மத்தாப்பு, புதைவாணம், புசுவாணம், சல்லடை வாணம், ஏரோபிளேன் வாணம், என்சின் வாணம், சடப்புடா என்பன போன்ற பல்வேறு விதவிதமான வாணங்கள் இப்பொழுது தோன்றியுள்ளன.

தீப்பந்தத்தில் குங்கலியத்தைத் தெளித்து நெருப்புச் சுடரை எழுப்புதல், சொக்கப்பனை கொளுத்துதல், பனம் பூவைக் கருக்கிக் கரித்தூளைத் துணிப்பையிலே வைத்து, அதனைக் கவைக் கொம்பிலே கட்டிக் கரித்தூளிலே நெருப்புத்துண்டை வைத்து, அந்தக் கவைக் கொம்பைக் கயிற்றிலே கட்டிச் சுழற்றித் தீப்பொறிகளை வீசுதல்போன்ற பழக்கங்கள்

தமிழகத்தில் நெடுங்காலமாக இருந்துவருகின்றன.

நெருப்பை வைத்துக்கொண்டு விளையாடுதலை, முதலில் மனிதன் போர்த்துறையிலே பழகிக்கொண்டு, பின்னர்தான் பொழுது போக்கு விளையாட்டாக மேற்கொண்டிருக்கிறன். அந்த விளையாட்டு நாளடைவில் வித விதமாக வளர்ந்துவந்துவிட்டது.

19-ஆம் நூற்றுண்டின் துவக்கத்தில்தான் வண்ண ஒளிகளை உமிழும் வாணங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி முறையாகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது. பல்வேறு கனிப்பொன்களாலாகிய (Metals) உப்பினைக்கொண்டு, கலவைப்பொருளியல் (Chemical) அறிவு, பொறியியல் (Engineering) அறிவு ஆகியவற்றைப் பயன்படுத்தி வாணங்கள் செய்யத் தொடங்கினர். அந்த முறைதான் இதுநாளில் விதவிதமாகக் கையாளப்படுகிறது. பொட்டாசியம் குளோரேட்டு (Potassium chlorate) பேரியம் நைட்ரேட்டு (Nitrates of Barium), சிட்ரான்டியம் (Strontium), சில கார்பொனேட்டுகள் (Carbonates) ஆகியவைகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வாணத்தொழில் மிக விரைவாக முன்னேறி வளர்ச்சியுறத்தொடங்கிற்று. சில ஆண்டுகளுக்கு முனபுவரையில் எண்ணிப்பார்க்கக்கூட முடியாமல் இருந்த வண்ண ஒளி உமிழும் வாணங்கள் பல இப்பொழுது நடைமுறைக்கு வந்துவிட்டன.

பச்சை நிறத்தோடு கூடிய அழகான வியப்புக்குரிய வெள்ளொளி உமிழும் மக்னீசியம் (Magnesium) என்னும் கனிப்பொன் (Metal) கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வாணத்தொழில் மிகமிக முன்னேறிவிட்டது என்னலாம். மக்னீசியம் தருவதுபோன்ற அழகான ஒளியை, அதற்குமுன் வேறு எவ்வகையிலும் அடைய முடியாமல் இருந்தது. மக்னீசியம் வந்துதான் புதுவகை ஒளிகாணும் வாயிலைத் திறந்துவிட்டது. அதற்கு பிறகு அலுமினியம் வந்தது. அழகான ஒளி உமிழும் வாணங்களுக்கெல்லாம் அலுமினியத்தைப் பயன்படுத்துவது என்பது பெருவழக்காயிற்று.

இந்த நாட்டில் தொழிற்சாலை நிறுவி, அதன்மூலம் வாணங்களை உற்பத்தியாக்குவது என்பது இந்த நூற்றுண்டின் துவக்கத்தில்தான் ஏற்பட்டது. அப்பொழுது, இப்பொழுதுள்ளவைபோன்று மிகப்பலவான வாணத்தொழிற்சாலைகள் ஏற்படவில்லை. இந்தியாவானது பிரிட்டன், செர்மனி, சீனு போன்ற நாடுகளைத்தான் எரிவாணங்கள்—வெடிவாணங்களுக்காக எதிர்பார்த்திருந்தது. சீனு, பட்டாசு என்று வெடிவாணத்தை ஏராளமாக இந்நாட்டில் இறக்கிக்கொண்டிருந்தது. பட்டாசைச் 'சீனவெடி' என்றும் 'சீனப்பட்டாசு' என்றும் இன்றும் அழைத்துவருவதைக் காணலாம்.

தீக்குச்சித் தொழிற்சாலைகள் எங்கு எங்கு ஏற்பட்டிருந்தனவோ, அங்கெல்லாம் வாணத் தொழிற்சாலைகளும் ஏற்படத் தொடங்கின. இந்தியத் துணைக்கண்டத்தில் தென்னுட்டில்—திராவிடத்தில்தான் வாணத் தொழிற்சாலைகள் ஏராளமாக ஏற்பட்டு, ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சிவகாசி, பாளையங்கோட்டை, கோவில்பட்டி, திருச்சூர், கள்ளிக்கோட்டை ஆகிய இடங்களில் வாணத் தொழிற்சாலைகள் முறையாகவும், விரைவாகவும் வளர்ச்சியுற்றுவருகின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் மட்டும் ஏறத்தாழ 20,000 பேர்கள் வேலைசெய்துவருகின்றனர். இந்தத் தொழிற்சாலைகள்தாம் முக்கியமானவைகளாக இருந்து, ஆண்டு முழுவதும் வேலைசெய்து, இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் வாணங்களை வழங்குகின்றன. இவையெல்லாம் சேர்ந்து நாள் ஒன்றுக்கு நான்கிலிருந்து ஐந்து டன்கள் வரையில் வாணங்களை உற்பத்தியாக்குகின்றன. இந்தத் தொழிற்சாலைகளெல்லாம், குடிசைத்தொழில்களாக இருந்துதான் வேலை செய்துவருகின்றன.

இலங்கை, கென்யா, மத்திய கிழக்கு நாடுகள் போன்றவைகள் இந்நாட்டு வாணங்களைப் பெரிதும் எதிர்பார்த்திருக்கின்றன. சிவகாசியில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 75 இலட்சத்திற்குமேல் வாணங்கள் விலைபோகின்றன என்றுல், பிற இடங்கள் எல்லாம் சேர்த்து எவ்வளவு இருக்கும் என்பதை ஊகித்தறிந்து கொள்ளலாம். அதில் 100-க்கு 20 பங்கு தொழிலாளர்க்கும், 10 பங்கு அனுப்பிவைக்கும் செலவுக்கும், 60 பங்கு கலவைகள்—தாள்கள் ஆகியவற்றிற்கும் போய்விடுகின்றனவாம்.

இந்தியப் பேரரசு தன் கட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்திச், சில வசதிகளைச் செய்து தருமேயானல் வாணத்தொழிற்சாலைகள் திராவிடத்தில் மேன்மேலும் வளர்வதற்கும், திராவிடத்தின் வளத்தைப் பெருக்குவதற்கும் பயன்படுவனவாகும்.

வாணத் தொழிற்சாலைகள், தேவையானபோது போர்ப்படைக்கான வெடிமருந்துகளையும், வெடிகுண்டுகளையும் உற்பத்தியாக்க



(35)

சநகர் அரசராக இருந்தபோதிலும், முனிபுங்கவராக வாழ்ந்தவராம். வேதத்தின் முடிவான சாரத்தை அவர் நன்றாகத் தெரிந்திருந்தாராம். அதனால் எப்பொழுதும் மனத்தில் வேதாந்த முடிவுகளைச் சிந்தித்தபடி, கர்மங்களைத் தியானம் பண்ணிக்கொண்டு அவர் இருப்பாராம். ஆத்மா என்றால் என்ன என்பதைப்பற்றி சநகரைப்போலத் தெரிந்தவர்கள் யாரும் இருந்திருக்கமாட்டார்கள்.

சநகருடைய மன நிலையைச் சோதிக்க பரமாத்மா விருப்பங்கொண்டார். ஒருவன் நல்லவனாயிருந்தாலும், கெட்டவனாயிருந்தாலும் ஆபத்துதான். நல்லவனாயிருந்தால், அவனுடைய மனநிலையைச் சோதிக்க வேண்டுமென்று, நமது கடவுளர்கள் கடும் சோதனைகளைப் போட்டுவிடுவார்கள். இல்லை, அவன் தீயவன் என்றால், "துஷ்டநிக்ரகம்" என்று தர்மப்படி அவனை அழிக்க முன்வருவார்கள். சநகரைச் சோதிக்க, திருமால் ஒரு பிராமண உருவில் பூலோகத்துக்கு வந்தார். பூலோகத்துக்கு வந்ததும், தானத்தில் சிறந்ததும் ஓமம் பண்ணுவதில் உயர்ந்ததுமான மிதிலை நாட்டுக்கு அவர் வந்து சேர்ந்தார். அந்த நாட்டுக்குப் புதிதாக ஒரு பிராமணர் வந்துள்ளார் என்றதும், அவருக்கு மகத்தான வரவேற்பு தரப்பட்டு மிதிலை நகருக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மிதிலை நகரத்து பிராமணோத்தமர்கள், புதிதாக வந்த பிராமணரை வரவேற்று, இருக்க இடந்தந்தனர்.

புதிதாக வந்த பிராமணர் மற்றவர்கள் பிரியப்படும் விதத்தில் நடந்துகொள்ளவில்லை. ஆசார, அனுட்டானங்களைவிட்டு, குடிப்பதும், கண்டோர் பின்னலைவதுமான தீய ஒழுக்கங்களில் அவர் உழன்றார். பிராமணர்கள் கண்டு அவரை வெறுத்து, ஒதுக்கித் தள்ளுமளவுக்கு அவருடைய ஒழுக்கக்கேடுகள் இருந்தன. ஒவ்வொரு தவறுக்கும் பிராயச்சித்தம் இருக்கிறதென்றாலும், இந்தப் புதுப் பிராமணர் செய்யும் அதர்மங்களுக்குப் பிராயச்சித்தமே இல்லாதிருந்தது. பொறுக்கமுடியாமல், மிதிலை நகரப் பிராமணர்களெல்லாம் ஒன்றுகூடி, அவரைப் பிடித்துக் கட்டிக் கொண்டுபோய், சநகர் முன் நிறுத்தினார்கள்.

பிராமணர் செய்த குற்றங்கள் மிகக் கடுமையானவையாக இருந்தன. என்ன செய்வதென்று வேத வித்தகரான சநகமகாராசருக்குப் புரியவில்லை. மற்ற வருணத்தைச் சேர்ந்

நல்ல முறையில் பயன்படுத்தப்படலாம். சென்ற இரண்டாவது உலகப் பெரும்போரின் போதுகூட பல வாணத் தொழிற்சாலைகள் அந்த வகைக்குப் பயன்படுத்தப்பட்டன.

வாணத்தொழில் மூலப்பொருள்களுக்கு இப்பொழுது வெளிநாடுகளையே எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலையிலிருக்கிறது. குளோரேட்டுக்கள், பர்குளோரேட்டுக்கள். பேரியம் நைட்ரேட்டுக்கள், சிட்ரான்டியம், பைரோடெக்னிக் அலுமினியம், கந்தகம் ஆகியவை வெளிநாடுகளிலிருந்துதான் வரவேண்டியிருக்கின்றன. இங்கு பெரும் கலவைப்பொருள் தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கான வழி காணப்பட்டால், உள்நாட்டிலேயே சில தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

வாணவேடிக்கை காசைக் கரியாக்கும் என்றாலும், காண்போர்க்குக் களிப்பினைத் தருகிறது! கரியைமட்டும் இங்கே தங்கச்செய்து, காசை வெளிநாடுகளுக்கு அனுப்புவதைவிட, காசையும் இங்கேயே தங்கும்படி செய்வதற்கான முறையில் வாணத்தொழிற்சாலைகளைப் பேணி வளர்க்க அரசாங்கம் முந்துறவேண்டும்!

தவரென்ருல், உடனே தண்டனே கொடுத்து விடலாம். இவரோ பிராமண வருணத்தைச் சேர்ந்தவர். செய்த குற்றங்கள் கடுமையான வை! குலமோ உயர்ந்தது! இவற்றையெல்லாம் யோசித்த சநகர் "ஓ! பிராமணரே! எவ்விதத்திலும் உமக்கு நான் தண்டனே விதிக்கமாட்டேன். என் ராஜ்யத்தின் அளவான எல்லேயைவிட்டு நீர் வெளியிற் செல்லும்" என்ருர்.

துர் நடத்தைக்குப் பேர்போன பிராமணர் பயமடையாமல், "அரசனே! சொன்னபடி செய்கிறேன். ஆனல் எனக்குப் புரியும்படி நீ சொல். உம்முடைய ராஜ்யத்தின் எல்லே எது? எனக்கு இப்பொழுது நியாயமாகச் சொல்" என்று கேட்டான்.

அரசனே எதிர்த்து இந்தக் கேள்வி கேட்டானேயென்று மற்றவர்கள் பிராமணனேக் கோபித்தார்கள். வேதாந்த விசாரணேயில் எப்பொழுதும் ஈடுபட்டிருக்கும் சநகருக்கு அந்தக் கேள்வியில் புதிய தத்துவஞானம் இருப்பது தெரிந்தது. கேள்விக்குப் பதில் சொல்லாமல், தலேயைத் தாழப்போட்டு, சநகர் இருந்தார்.

பிராமணர் விடவில்லே. "அரசனே! உடனே சொல்லு! நான் உன் ராஜ்ஜியத்தை விட்டு, துரத்தப்பட்டவனுகப்போகிறேன்."

சநகர் யோசித்து, "ஓ! பிராமணரே! இந்தப் பூமியில் எனக்கு இருப்பிடம் இல்லே, இல்லேயானல் இந்தப் பூமி முழுவதும் என்னுடையதாகும்! நீர் இங்கு நின்ருலும் நில்லும், அல்லது சென்ருலும் செல்லலாம்! என்னுடைய புத்தி இபபொழுது தெளிவாக இருக்கிறது," என்று சொன்னர்.

இவ்வாறு சொல்லிவிட்டு, சநகர் தனக்குப் பிரியமான முனிவர்களுடன் அமர்ந்து வேதாந்த விசாரணே செய்துகொண்டிருந்தார். சநகரின் தீர்ப்பு மிதிலே நகரப் பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லே. பிராமண உருவத்தில் வந்திருக்கும் பகவான் சநகருடைய மனநிலேயை இன்னும் பரிசோதிக்க விரும்பினர். உடனே மிதிலா நகருக்குத் தீமூட்டினர். சிறுகச்சிறுக வளர்ந்து, மிதிலாபுரி முழுவதையும் வளேத்து பலமான தீ உயர்ந்து வீசியது. மிதிலேயின் அழகிய தெருக்கள், செல்வங்கள் எல்லாம் நெருப்பில் சிக்கின. ஊர் மக்கள் கோவெனக் கதறி அங்குமிங்கும் ஓடினர்கள்.

மிதிலே தீயில் வெந்து துடித்துக்கொண்டிருக்கும்பொழுது, மிதிலே நகர அரசன் சநகர் நகருக்கு வெளியிலுள்ள காட்டில் முனிவர்களுடன் அமர்ந்து வேதாந்தம் பேசிக்கொண்டிருந்தார். வேதாந்தப் பேச்சில் அவருடைய மனம் ஆழ்ந்திருந்ததால், ஊர் பற்றி யெரிவதும், அங்கிருந்து மேகம்போல புகையெழுவதும் அவர் கண்களில் படவில்லே. மக்கள் போடும் கூக்குரல் சத்தமும் அவர் காதில் விழவில்லே. எதைப்பற்றியும் கவலேப்படாமல் வேதாந்த விசாரணேயில் சநகர் ஈடுபட்டிருந்தார்.

வெந்த புண்ணுடனும், கருகிய ஆடைகளுடனும், கண்ணீர் மல்கிய கண்களுடனும் குடிமக்கள் பலர் ஓடிவந்து சநகரிடம் முறையிட்டார்கள்.

சநகர் அவர்களேக் கவனிக்காமல் இருந்தார்.

"அரசே! மிதிலாபுரி பற்றி யெரிகிறது, உடனே வந்து, அதை நிறுத்த உதவி செய்யுங்கள்! குடிமக்களின் தந்தை அரசனன்ருே!"

"ஓ! சநக மகாராசரே! அதோ உமது மிதிலாபுரி தீயால் அழிக்கப்படுகிறது. உடனே வாரும்!"

"அரசர்களில் உயர்ந்தவரே! உமது அளவற்ற செல்வம், குடிமக்களின் உடைமைகள் எல்லாம் தீயில் கருகிக்கொண்டிருக்கின்றன. அவற்றை அழிவிலிருந்து காப்பாற்ற வாருங்கள்!"

குடிமக்களும், மந்திரி பிரதானியர்களும் அரசரை அழைத்தார்கள்.

சநகர் அவர்களேப் பார்த்து புன்முறுவல் செய்தார். "அந்தோ! அஞ்ஞானத்தில் நீங்கள் முழுகியிருக்கிறீர்கள். என்னுடைய அளவற்ற செல்வம் தீயால் அழிக்கப்படுகிறது என்று சொல்லுகிறீர்கள், என்னுடைய செல்வம் அழிக்கப்படாதது என்பது உங்களுக்குத் தெரியாது. மிதிலாபுரி எரிக்கப்படும்பொழுது என்னுடையதொன்றும் எரிக்கப்படவில்லே."

இவ்வாறு வேதாந்த மனப்பான்மையுடன் பேசிவிட்டு, சநகர் தமது விசாரணேயை மறுபடியும் துவக்கினர். அங்கு மிதிலாபுரி சாம்பல் மேடாகியது.

சநகருடைய வேதாந்த மனத்தைக் கண்டு மெச்சிய பகவான்—அரசனென்ருல் அப்படித்தான் இருக்கவேண்டும் என்று எண்ணினர் போலும்!—சநகரை அழைத்து "ஓ! அரசனே! வேத தர்மத்தில் உன் மனம் எப்பொழுதும் இருக்கட்டும். எல்லாவிதத்திலும்

வைராக்கியமுள்ளவனுக இரு. உனக்கு நலமுண்டாகட்டும்!'' என்று வாழ்த்தினுர். அத்துடன் மிதிலாபுரியைப் புதுப்பித்து, சனகருக்கு வேண்டிய வரங்களை அருளி பகவான் அந்தர்த்தானத்தை அடைந்தார்.

இந்தக் கதை பாரதத்தில் சாந்தி பருவத்தில், இருபத்திரண்டு இருபத்து மூன்ருவது அத்தியாயங்களில் வருகிறது. பாண்டவர்களில் மூத்தவரான தருமப்பிரபு கேட்க, பீஷ்மாச்சாரியார் சொன்னதாகும்.

சனகரைப் பற்றிக் கம்ப இராமாயணத்தில் அதிகமாகக் கூறப்படவில்லை. சீதையை வளர்த்து, சிவதனுசை வளைப்பவருக்கு அவளைத் தருவதாக அவர் பிரகடனம் செய்திருந்தார். அதன்படி விசுவாமித்திரர் யாகத்தை முடித்துத் திரும்பிய இராமபிரான் வில்லை முறித்து, சீதையை மணந்தார். பாரதத்தில் காணப்பட்ட அளவுகூட, சனகரைப்பற்றித் தனிக்கதைகள் கம்ப இராமாயணத்தில் கிடையாது. பாலகாண்டம் கோலங்காண்படலத்தின் முதற் பாட்டில் சனகரைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது "தாவில் வெண் கவிகைச் செங்கோற் சனகனை'' என்று கம்பர் குறிப்பிடுகிருர். அதாவது "குற்றமில்லாத வெண் கொற்றக் குடையும், நீதி தவருத அரசாட்சியையும் உடைய சனகன்'' என்று பொருள் படும்.

பால காண்டம் உலாவியற் படலத்தில் இரண்டு இடங்களில் சனகர் குறிப்பிடப்படுகிருர். 27-ம் பாடலில், சனகன் செய்த தவப் பயனுல் இராமன் மிதிலைப்பட்டணம் வந்தான் என்றும், 52-ம் பாடலில் "திங்கள் தங்கள் குலக்கொடிச் சீதையாம்'' என்று கூறும் பொழுது சனகர் சந்திரவமிசத்தைச் சேர்ந்தவரென்பதும் வருகின்றன. இவைபோல் இரண்டோரிடங்களில்சனகர் குறிப்பிடப்படுகின்ருரே அன்றி, அவரைப்பற்றியோ, அவரது குலமுறைபற்றியோ அதிகமான பாடல்கள் கிடையாது. சனகரைப் பற்றிய பாடல்கள் இல்லாவிட்டாலும், அவர் ஆண்ட மிதிலையைப்பற்றிக் கம்பர் மிகுந்த சுவையுடன் பாடியிருக்கிருர். மிதிலைக்காட்சியில், கலவிப்போருக்குப் பின் மகளிர் இளைத்துக்கிடக்கும் தன்மையிலிருந்து, மகளிர் நடனமாடுங் காட்சி, ஊசலாடும் தோற்றம், மதுகுடித்து மங்கையர் வெறியுடன் இருத்தல், மைந்தர்கள் சூதாடுதல், பெண்கள் நீராடுதல், போன்று பலவற்றைத் தீட்டிடும் பாட்டுகள் பலவற்றைச் செய்துள்ளார். சனகர் இராஜ ரிஷியாக, வேதாந்த விசாரணையில் எப்பொழுதும் முழுகி இருப்பவராகப் பாரதக்கதையில் சித்தரிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்தம் குடிமக்கள் காமமும் மதுவுங்கொண்டு களிப்பெய்துபவர்களாக கூறப்படுகின்றனர்.

விசுவாமித்திரரும், இராம லட்சுமணரும் மிதிலை நகருக்குள் செல்லும்பொழுது, கள்ளைக் குடித்து வெறியுடன் நிற்கும் பெண்களை அவர்கள் பார்க்கிருர்களாம். கம்பர் அதைப் பாடுகிருர் :

"பளிக்குவள் ளத்து வாக்கும்
பசுநறுந் தேறன் மாந்தி
வெளிப்படு நகைய வாகி
வெறியினை மிழற்று கின்ற
ஒளிப்பிறு மொளிக்க வொட்டா
ஊடலை யுணர்த்து மாபோற்
களிப்பினை யுணர்த்துஞ் செவ்வி
கமலங்கள் பலவுங் கண்டார்''

அதாவது "பளிங்குக் கிண்ணங்களில் வார்க்கப்பட்டப் புதிய வாசனை வீசும் மதுவை நன்ருகக் குடித்துவிட்டு, காரணமின்றி சிரிப்பவர்களாய், (காம) வெறிகொண்ட வார்த்தைகளைப் பேசி, மறைத்து வைக்க முயன்ருலும், முடியாதபடி தமது பிணக்கை அறிவிக்கும்படி களிப்பை வெளிக்காட்டுகிற அழகிய செந்தாமரை மலர்கள் பலவற்றைக் கண்டார்கள்.''

மதுவை அதிகமாக உண்டதால், காரணமில்லாமல் சிரிப்பதுடன், வெறி தரும் பேச்சுகளையும் பேசுகிருர்களாம். அவர் மறைக்க முயன்ருலும், அவர்களது காமக்களிப்பு மற்றவர்களுக்குத் தெரிந்துவிடுகிறதாம். அந்தப் பெண்கள் ஒருவர், இருவரல்ல, மிகப்பலரை ஊர்த்தெருவில் செல்லும் இராமரும் மற்றவர்களும் பார்க்கிருர்கள். அத்தகைய பெண்களை —பெண்கள் என்றுகூட குறிப்பிடாமல், "செவ்விக் கமலங்கள்'' அழகிய செந்தாமரைகள் என்று கவிதை நயத்துடன் கம்பர் குறிப்பிடுகிருர்.

மற்ருெரு பாட்டில் மைந்தர் வட்டாடும் இடங்களைப் பற்றிக் கூறும்பொழுது,

"இயங்குறு புலன்க ளங்கு
மிங்குங்கோண் டேக ஏகி
மயங்குபு திரிந்து நின்று
மறுகுறு முணர்வி தென்னப்
புயங்களிற் கலவைச் சாந்தும்
புணர்முலைச் சுவடு நீங்காப்
பயங்கெழு குமரர் வட்டாட்
டாடிடம் பலவுங் கண்டார்''

என்று கம்பர் பாடியுள்ளார்.

பலவிடத்தும் செல்லத்தக்கப் பஞ்சேந்திரியங்களும், அதற்குரிய பொருள்களில் இழுத்துச்செல்ல மயங்கி, உணர்வு கலங்கி மிதிலை நகரத்து இளைஞர்கள் திரிகிறார்கள். அந்தப் பழக்கங்களால், "கலவைச்சாந்துடனும், புணர் முலைச் சுவடுடனும்" அவர்களுடைய மார்புகள் விளங்குகின்றன. அந்தக் கோலத்துடன் அவர்கள் வட்டாடும் இடங்களுக்கு வந்து ஆட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தகைய மைந்தர்களையும் இராமலட்சுமணர்கள் மிதிலை நகர வீதிகளில் கண்டனர்.

ஒரு நகரில் இருப்பவர்களில் எல்லோரும் ஒரேவகையான உயர் ஒழுக்கத்துடன் இருப்பார்களென்று கூறமுடியாது. நல்லோரும், தீயோரும், உயர் ஒழுக்கமுடையவர்களும், இழிந்த ஒழுக்கமுடையவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவற்றின் மிகுதியும், வலிவும் கண்டே ஒரு நகரின் பெருமை நிச்சயிக்கப்படும். தெய்வக்கதையில், சிற்றின்பத்தைக் கிளர்ந்து கூறுகின்ற பாட்டுகள் அதிகமிருப்பது ஆச்சரியமானது. சநகர் ஆண்ட மிதிலையைப் பற்றிக் கூறும்பொழுது, சீதை வந்து வசிப்பதற்கான புண்ணிய இடம் என்று கூறப்படுகிறது. மிதிலைக்காட்சிப்படலத்தின் முதற் பாடலில் "மையறு மலரின் நீங்கி யான் செய் மாதவத்தின் வந்து, செய்யவள் இருந்தாளென்று" என்று பாடப்பட்டிருக்கிறது. மிதிலை செய்த தவத்தின் பயனாக, தாமரை மலரில் இருந்தவள் சீதையாக வந்து அங்கு சேர்ந்தாள் என்று பெருமையுடன் பேசப்படுகிறது. அத்தகைய புண்ணிய நகரைப் பார்வையிடும் கம்பர் மாதர்தம் இடைபற்றியும், நடைபற்றியும்தான் அதிகப் பாட்டுகளைத் தீட்டியுள்ளார். ஒருவேளை, வேதாந்த மனப்பான்மையுடன் எதையும் கவனித்திடும் சநகர், நகர் பற்றி எரிந்தாலே கவலைப்படாமல் இருப்பவர், மிதிலாநகரக் காட்சிகளைப்பற்றிக் கவலைப்படாமல் இருந்திருப்பார். (தொடரும்)

மாணவர்களுக்கேற்ற ஆசிரியர்

ஒரு கல்லூரிப் பேராசிரியரை மாணவர்களுக்குப் பிடிப்பதில்லை. ஏனென்றால் அவர் வகுப்பில் மிகக் கடுமையாக இருப்பதுடன், ஒவ்வொரு மாணவனையும் இடையிடையேக் கேள்விகள் கேட்டவண்ணமிருப்பார். படிக்காத மாணவர்களுக்கு—வகுப்பில் பெரும்பான்மையோராக அவர்கள் இருப்பார்கள் என்று கூறத்தேவையில்லை—பேராசிரியரின் வகுப்பு என்றால் வெறுப்புத்தட்டியது.

பேராசிரியரை அவமானப்படுத்தவேண்டுமென்று மாணவர்கள் ஒன்றுகூடி யோசித்தார்கள். அதற்குத் தலைமைவகித்த மேதாவி ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தான். அதன்படி கல்லூரியின் உயிர்நூல் பகுதியில், பஞ்சு அடைக்கப்பட்ட குரங்கை வகுப்பறைக்குக் கொண்டுவந்தார்கள். பேராசிரியரைப்போல சட்டை, கோட், டை, எல்லாம் அதற்குப் போட்டார்கள். ஒருவன் மூக்குக் கண்ணாடியைக் கொண்டுவந்து மாட்டினான். மற்றொருவன் கோந்தைத் தடவி, மீசை ஒட்டவைத்தான். அலங்கரிக்கப்பட்ட குரங்கை மேடையில் உட்காரும் நாற்காலியில் அமர்த்தினார்கள். அதன் கையில் புத்தகம் ஒன்று வைக்கப்பட்டது. வகுப்பு ஆரம்பிக்கும் நேரம் வந்ததும், கடைசி நேர அலங்காரத்தை முடித்துவிட்டு, மாணவர்கள் தங்கள் இடத்தில் போய் உட்கார்ந்துகொண்டார்கள்.

பேராசிரியர் வகுப்பினுள் நுழைந்தார். மாணவர்கள் என்றுமில்லாத அமைதியுடன், அடக்கத்துடன் எழுந்துநின்றார்கள். பேராசிரியருக்கு ஆச்சரியமாக இருந்தது. திரும்பிப் பார்த்தார்! குரங்கு 'ஆசிரியர்' உருவத்தில் அமர்ந்திருந்தது. மாணவர்கள் செய்துள்ள வேலையின் அர்த்தம் புரிந்தது. அவருக்குக் கோபம் வரவில்லை. சிரித்துக்கொண்டு மாணவர்களைப் பார்த்துச் சொன்னார், "கடைசியாக உங்களுடைய புத்திசாலித்தனத்துக்கேற்ற ஆசிரியரை நீங்கள் கண்டுபிடித்துவிட்டதற்காக, உங்களை நான் பாராட்டுகிறேன்."

வினாவும் விளக்கமும்

வினா : புராணக் கதைகள் இல்லாவிட்டால் கடவுள் இல்லாமல் போய்விடுவாரா? பெரியாரைப்பற்றிய (பொய்யும் மெய்யுமான) வதந்திகளை நம்பாததால் பெரியாரே இல்லை என்று சொல்லிவிட முடியுமா? பொய்யும் மெய்யும் கலந்த வதந்திகளைக் கொண்டே பெரியார் அவர்களின் தகுதியையும் குணநலன்களையும் மதிப்பிடுவது சரியா?

[இது அருள்நெறித் திருக்கூட்டத்தார் கேட்டுள்ள 7-வது வினாவாகும். முன்னைய ஆறு வினாக்களுக்கும் தொடர்ந்து சென்ற "மன்றம்" இதழ்களில் விளக்கம் தரப்பட்டுள்ளதைப், படிப்போர் கண்டுகொண்டிருக்கக் கூடும்.]

விளக்கம் : புராணக்கதைகள் அனைத்தையும் அப்படியே நம்பவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை, அவற்றில் பொய்யும் கலந்திருக்கின்றது என்று ஒப்புக்கொள்ளும் நிலைக்கு அருள்நெறித் திருக்கூட்டத்தார் வந்திருப்பது கண்டு, அந்த அளவுக்கு நாம் மகிழ்ச்சிகொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், சிவபுராணம், விட்ணுபுராணம், இந்திரபுராணம், மச்சபுராணம் போன்ற இன்னபிற புராணங்களில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் அப்படியே முழுக்க முழுக்க நம்பித்தான் ஆகவேண்டும் என்று மூடபக்தியாலும், குருட்டு நம்பிக்கையாலும் உளறிக்கொட்டும் மதவெறிபிடித்த வைதீகர்களினின்றும், அருள்நெறிக் கூட்டத்தார் தம்மைச் சிறிது விலக்கிக்கொண்டு நம்மோடு வாதிட முன்வந்திருப்பது வியப்புக்குரியதும், மகிழ்ச்சிக்குரியதும் ஆன செயல்தான்.

"புராணக்கதைகள் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்துவனவாக இல்லை" என்ற ஒரே காரணத்தைக் காட்டி, அந்த அளவிலேயே நின்று, "ஆகவே 'கடவுள்' என்று கூறப்படும் ஒன்று இருக்கமுடியாது!" என்ற முடிவுக்குப் பகுத்தறிவு இயக்கத்தினர்வந்துள்ளதாக அருள்நெறித்திருக்கூட்டத்தார் கருதுகிறார்கள்போலும். அப்படித்தான் கருதுகிறார்கள் எனின், அவர்களின்அறியாமை எள்ளி நகையாடற்பாலதாகும். 'பக்தி'நெறியினர் 'கடவுள்' உண்மைக்கு என்ன என்ன காரணங்களை எடுத்துக்கூறுகிறார்களோ, அந்தந்தக் காரணங்கள் அனைத்தும் அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருந்திவராதது கண்டுதான் "அப்படிப்பட்ட 'கடவுள்' ஒன்று இருக்கமுடியாது!" என்ற கருத்தைப் பகுத்தறிவு இயக்கத்தினர் வெளியிடவேண்டிய இன்றியமையாமைக்கு வந்து சேருகின்றனர் என்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார் உணர்தல்வேண்டும்.

புராணக் கதைகளை மறுத்துக் கூறவேண்டிய கட்டாயமும், அவற்றை அக்குவேறாக ஆணிவேறாகப் பிய்த்தெடுத்து, அவற்றின் போலித் தன்மைகளையும் உண்மைக்குப் பொருந்தாத் தன்மைகளையும் தவிடுபொடியாக்கிக் காட்டவேண்டிய கட்டாயமும், பகுத்தறிவியக்கத்தினர்க்கு ஏன் ஏற்படுகின்றன? எப்பொழுது ஏற்படுகின்றன? என்றால், அந்தப் புராணக்கதைகளைப், 'பக்தி' நெறியினர் உண்மை ஆதாரங்களாகக்கொண்டு, அவற்றின்மூலம் 'கடவுள்' உண்மையை நிலைநாட்ட முற்பட்டுப், பகுத்தறிவு நெறியினரை வாதுக்கழைத்து, அந்தக் கதைகளைப் பகுத்தறிவு நெறியினர்முன் வைக்கும்போதுதான், மேற்கூறப்பட்ட கட்டாயங்கள் ஏற்படுகின்றன. புராணக் கதைகளை ஆதாரங்களாகக் கொள்ள வேண்டிய கட்டாயமில்லை என்று கருதி அருள்நெறித் திருக்கூட்டத்தார் அவற்றை ஒதுக்கி வைத்துவிட முனைவார்களேயானால், நாமும் அவற்றை ஒதுக்கிவைத்துவிட்டு, வேறு காரணங்களை அலசிப்பார்க்க முனையலாம். ஆனால் அவர்கள் புராணக்கதைகளை ஆதாரமாகக்கொள்ள முற்படும்போதுதான், நாமும் அவற்றின் பொய்மைகளைப் புட்டுக்காட்டி அவர்களின் வாதத்தைத் தரையில் குப்புறக் கவிழும்படி செய்யவேண்டியவர்களாக ஆகிறோம்.

"புராணக் கதைகள் இல்லாவிட்டால் கட

வுள் இல்லாமல் போய்விடுவாரா?'' என்று அந்தத் திருக்கூட்டத்தார் கேட்கின்றனர். '''கடவுள்' இருக்கிறார்!'' என்பதற்கு அவர்கள் கூறும் வேறு காரணங்கள்தாம் யாவை? அப்படிக் காரணங்கள் என்று அவர்கள் இதுவரையில் எடுத்து முன்வைத்தவைகளெல்லாம் பகுத்தறிவாராய்ச்சிக்கு முன் நாடியிழந்து, நரம்புதளர்ந்து, நிற்கும் வகையற்று வீழ்ந்துவிட்டனவே! இனியும் ஏதாவது காரணங்கள் இருந்தால் எடுத்துவைக்கட்டும்! அலசிப் பார்ப்போம்! 'கடவுள்' உண்மைக்குப், புராணக்கதைகள் அல்லாமல் சொல்லப்படும் வேறு காரணங்களும் பொருந்தாத காரணத்தால்தான், பகுத்தறிவு இயக்கத்தினர் மறுப்புக் கருத்துக்கள் தருகின்றனர் என்பதைத் திருக்கூட்டத்தார் உணர்ந்துகொள்ளவேண்டும்.

"பெரியாரைப் பற்றிய வதந்திகளை நம்பாததால் பெரியாரே இல்லை என்று சொல்லிவிட முடியுமா?'' என்று அத்திருக்கூட்டத்தார் கேட்கின்றனர். "உறுதியாக முடியாது! முடியாது!! முடியாது!!!'' என்றுதான் நாம் அழுத்தந் திருத்தமாக விடையிறுக்கிறோம். ஏனென்றால் அவர் இருக்கிறார் என்பதை (வதந்திகளை ஆதாரமாகக் கொள்ளாமல்) நிலைநாட்ட வேறுபல உண்மையான—யாராலும் மறுத்துவிடமுடியாத காரணங்கள் இருக்கின்றன. அவரைக் கண்டார்—கேட்டாரின் கூற்றுக்களின் ஒருமைப்பாட்டைக்கொண்டும், அவரின் நிழற்படங்களின் ஒருமைப்பாட்டைக் கொண்டும், யாரும் அவர் இருக்கும் இடம் சென்று நேரில் கண்டறியும் தன்மை கொண்டும் அவர் இருக்கிறார் என்பதை நிலைநாட்ட முடியுமே! 'கடவுளை' அப்படி நிலைநாட்ட முடிகிறதா? "பெரியார் இருக்கவில்லை!'' என்று மறுத்துக்கூற, எந்த ஒரு பொருந்தும் காரணத்தை யார்தான் எடுத்து முன்வைக்க முடியும்? பக்தி நெறியினர் கூறுகிறபடியுள்ள 'கடவுள்' ஒன்று இருக்கமுடியாது என்று கூற எவ்வளவோ மறுக்கமுடியாத காரணங்களை எடுத்துவைக்க முடிகிறதே! பெரியாரைப் பற்றிக் கூறும்போது ஒருவர் "அவர் குட்டை'' என்றுசொல்லி, மற்றொருவர் "அவர் நெட்டை'' என்றுசொல்லி, ஒருவர் "அவர் கறுகறுத்த மேனியர்'' என்று சொல்லி, மற்றொருவர் "அவர் செக்கச்சிவந்த மேனியர்'' என்று சொல்லி, ஒருவர் "அவர் மொட்டைத்தலையுடையவர்'' என்று சொல்லி, மற்றொருவர் "அவர் குடுமித்தலையுடையவர்'' என்று சொல்லி முரண்பட்ட செய்திகளைப் பற்பலரும் எடுத்துவைப்பதில்லை. பெரியாரைப் பார்த்துவிட்டு வருகிற எல்லோரும் "அவர் நடுத்தரமான உயரமுடையவர், சிவந்த மேனியர், வெள்ளிய தாடியையுடையவர், பருத்தத் தோற்றமுடையவர்'' என்று தான் கூறுகிறார்கள். ஆனால் 'கடவுளை'யும் 'அவரு'டைய தன்மைகளையும் கண்டறிந்து கொண்டுவிட்டதாகக் கூறும் பல்வேறு மதங்களைச் சார்ந்த பல்வேறு பக்தி நெறியினரும் பல்வேறு முரண்பட்ட கருத்துக்களையல்லவா எடுத்து மொழிகிறார்கள்! ஒரு பக்தி நெறியினரின் கருத்தை மற்றொரு பக்தி நெறியினரின் கருத்து மறுத்துப் பொய்யாக்குகின்றதே! அவர்களில் யார் சொல்லுவதை உண்மை என்று ஏற்றுக்கொள்வது? எல்லோரும் நம்பிக்கையூகத்தால் ஏதேதோ உளறிக் கொட்டுகிறார்கள் என்பதுதான் தெளிவாகத் தெரிகிறதேயல்லாமல், யாரும் உண்மையைக் கண்டுவிட்டதாகத் திட்டவட்டமாகத் தெரியவில்லையே! 'பெரியார்' உண்மையை யாரும் கண்டறிந்துகொள்ளலாம்; ஆனால் 'கடவுள்' உண்மையை யாரும் கண்டறிந்துகொள்ள முடிவதில்லையே! பக்தி நெறியினர் நம்பிக்கை யூகத்தில் 'கடவுள்' உண்மையை நிலைநாட்டுகிறார்களே என்றால், அந்த நம்பிக்கையூகக் கருத்துக்கள் எதுவும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்குமுன் நிலைநிற்கமுடியவில்லையே!

"பொய்யும் மெய்யும் கலந்த வதந்திகளைக் கொண்டே பெரியார் அவர்களின் தகுதியையும், குணநலன்களையும் மதிப்பிடுவது சரியா?'' என்று அருள் நெறித் திருக்கூட்டத்தார் கேட்கின்றனர். "அது சரியாகாது!'' என்றுதான் நாம் பன்முறை எடுத்தியம்புகிறோம். "பகுத்தறிந்து பார்ப்பதன் மூலம்தான் பெரியாரின் தகுதியையும், குணநலன்களையும் மதிப்பிடவேண்டுமே ஒழிய, வதந்திகளை அப்படியே நம்பி ஏற்றுக்கொள்ளக்கூடாது'' என்றுதான் நாம் பல்காலும் அறிவுறுத்திவருகிறோம். அதுபோலவே 'கடவுள்' என்னும் கற்பனைப் பொருளைப் பற்றிப் பக்திநெறியினர் கூறும் வதந்திகளை அப்படியே நம்பிவிடாமல், பகுத்தறிந்து பார்க்கவேண்டும் என்று கூறுகிறோம். அப்படிப் பகுத்தறிந்து பார்க்கும்போது, 'கடவுள்' உண்மைக்குக் காட்டப்படும் காரணங்கள் பலப்பலவும் பொய் வதந்திகளாகவே தென்படுகின்றன!

❖ ❖ ❖

வினா: வடநாட்டு ஏகாதிபத்தியம் திராவிட நாட்டின் சுதந்திர-ஆட்சிப் பொறுப்பைத் திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களிடம் ஒப்

படைத்தால் தி. மு. கழகத்தின் நிலை எங்ஙனம் இருக்கும்?

விளக்கம்: அப்படி ஒரு நிலை ஏற்பட்டால் தி. மு. கழகம் உளமார வரவேற்கவே செய்யும். திராவிடநாட்டு விடுதலைதான் தி. மு. கழகத்தின் முதன் முக்கிய குறிக்கோளே ஒழிய, அதனை யார் பெறவேண்டும் என்பதல்ல. தனித் திராவிடநாட்டின் நலத்திலே அக்கரை காட்டும் திராவிடநாட்டைச் சேர்ந்த யாரிடத்தில் சுதந்திர திராவிடத்தின் ஆட்சிப் பொறுப்பை முதலில் ஒப்படைத்தாலும் அதனைத் தி. மு. கழகம் வரவேற்கவே செய்யும். அப்படிப் பெறுபவர் பெரியார் இராமசாமியாக இருப்பாரேயானால் நமக்குப் பன்மடங்கு மகிழ்ச்சிதான். அப்படித் திராவிடநாட்டின் விடுதலை கிட்டிவிடுமேயானால், முதன் முக்கிய குறிக்கோள் வெற்றிபெற்றுவிட்டதாகத் தி. மு. கழகம் கருதும். விடுதலைபெற்ற திராவிடத்தில் எப்படிப்பட்ட சனநாயக சோசியலிசக் குடியாட்சிமுறை இருக்கவேண்டும் என்பதைக் கூறி, அதனை இரண்டாவது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு, நிறைவேற்றப் பாடுபட்டுவரும். வினாவெழுப்பும் நண்பர் கூறுகிறபடி பெரியார் ஆட்சி ஏற்பட்டு, ஆட்சி, முறையாக நடைபெறுமேயானால் அதனைத் தி. மு. கழகம் ஆதரிக்கும்; ஆட்சி முறையற்று நடக்குமேயானால் அதனைத் தி. மு. கழகம் எதிர்க்கும்; புதிய ஆட்சியைக் கொணர பாடுபடும்.

❖ ❖ ❖

வினா: "செல்வாக்கற்ற கட்சிக்குத்தான் கிளர்ச்சி தேவை" என்று லால்குடி மாநாட்டில் கூறிய திரு அண்ணாதுரை ஏன் மும்முனைப் போராட்டம் நடத்தினார்?

விளக்கம்: அறிஞர் அண்ணாதுரை அவர்கள் லால்குடி மாநாட்டில் கூறிய சொற்றொடர் "செல்வாக்கற்ற கட்சிக்குத்தான் கிளர்ச்சி தேவை" என்பதல்ல, "செல்வாக்கற்ற கட்சிதான் கிளர்ச்சியைத் தேடியலையும்" என்பதாகும்.

இரண்டு சொற்றொடர்களுக்கும் உள்ள கருத்து வேறுபாட்டைச் சற்று கூரிய மதி படைத்தோரே எளிதில் புரிந்துகொள்ளலாம். "செல்வாக்கற்ற கட்சிக்குத்தான் கிளர்ச்சி தேவை" என்றால், செல்வாக்குள்ள கட்சி கிளர்ச்சியிலே தலையிடாது என்று பொருள்படும். உலக நாடுகளின் பல்வேறு அரசியல் கட்சிகளின் வரலாற்றை நன்கு துருவி ஆராய்ந்தறிந்தவரும், கிளர்ச்சிகள் பல நடத்திய கட்சியிலேயிருந்து பழக்கப்பட்டு வருமான அறிஞர் அண்ணா அவர்கள், "செல்வாக்குள்ள கட்சிதான் கிளர்ச்சியிலே தலையிடாது" என்பதையோ, "செல்வாக்கற்ற கட்சிக்குத்தான் கிளர்ச்சி தேவை" என்பதையோ கூறியிருக்கமாட்டார் என்பதைச் சின்னஞ்சிறுவர்கூட அறிந்துதெளிந்திருப்பர்.

சில செல்வாக்கற்ற கட்சிகள் காரணகாரியத் தொடர்பைப்பற்றிக் கவலைப்படாமல் ஏதாவது ஒரு கிளர்ச்சி செய்து எப்படியாவது ஒரு செல்வாக்கைப்பெறவேண்டும் என்று முயலுவதை உலகியல் நடைமுறையில் காணவே செய்கிறோம். அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் லால்குடி மாநாட்டில் சுட்டிக்காட்ட நேர்ந்தது. லால்குடி மாநாட்டில், கிளர்ச்சிக்கான திட்டம் தீட்டப்படவேண்டும் என்று துடிப்புள்ள இளைஞர்கள் கேட்டதற்கு, விடை கூறும்முகத்தான், அறிவுரை கூறியபோது, அறிஞர் அண்ணா அவர்கள், "செல்வாக்கற்ற கட்சிதான் கிளர்ச்சியைத் தேடி அலையும்; தி. மு. கழகம் அப்படி ஒன்றும் செல்வாக்கற்ற கட்சியாக இருக்கவில்லை; எனவே நாம் கிளர்ச்சியைத் தேடியலையவேண்டாம்; அவசியமான கிளர்ச்சிகள் நம்மையே தேடிவரும்" என்னும் கருத்துப்பட கூறினார்கள். இந்தக் கூற்றை வேறுவிதமாகத் திரித்துவைத்துக்கொண்டு, சில பொறாமைக்காரர்கள் ஓயாமல் ஊளையிட்டு வருகிறார்களே என்றால், 'பயனில் சொல் பாராட்டும் பதர்கள்' என்று அவர்களை ஒதுக்கித்தள்ளத்தான் வேண்டும்.

மும்முனைப் போராட்டத்தை அறிஞர் அண்ணா அவர்கள் நடத்தவில்லை, தி. மு. கழகந்தான் நடத்திற்று என்பதையும், அந்தப் போராட்டம் தி. மு. கழகம் தேடியலைந்து கண்டுபிடித்த போராட்டம் அல்லவென்பதையும், வடநாட்டு முதலாளித்துவமும், பண்டித நேருவும், ஆச்சாரியாரும் ஏற்படுத்திய சூழ்நிலைகள் தந்த போராட்டமாகும் என்பதையும் வினா எழுப்பியுள்ள அன்பர் உணர்வாராக!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0
இலங்கைக்கு வி. பி. மூலம் ஆண்டுக் கட்டணம்	7—8—0	

மலர்க்காடு

" கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி "

பழக்கூடை

[ஆசிரியர் : மு. கருணாநிதி. பக், 80. விலை : ரூ. 1—0—0. கிடைக்குமிடம் : திராவிடப் பண்ணை, தெப்பக்குளம், திருச்சி.]

'தொடர்கதை' — 'கடைசிக்கட்டம்' — 'புகழேந்தி'—'திடுக்கிடும் கதை'—'அபாக்ய சிந்தாமணி' என்ற ஐந்து கதைக் கனிகளை, இலக்கிய எட்டுக்கூடையிலே வைத்து நாட்டு மக்களுக்கு அளிக்கக் கலைஞர் மு. கருணாநிதி உள்ளன்போடு முன்வர, அதனை நாட்டு மக்களிடம் அழகிய முறையில் கொண்டுபோய்ச் சேர்க்கும் பணியினைத் திராவிடப் பண்ணையார் திறம்படச் செய்துள்ளனர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் சொல்லோவியம் அவரது உணர்ச்சி உள்ளத்திலிருந்து துள்ளிக்குதித்து, உயிர்ப்பெற்றுப், பெருமித நடைபோடும் தன்மை வாய்ந்தது என்பதை அனைவரும் அறிவர். வேறுபட்ட பழங்கள் வேறுபட்ட இனிய சுவையைப் பயப்பதைப்போல், இந்நூலிலுள்ள ஒவ்வொரு கதையும் ஒவ்வொருவகை இனிய சுவையைப் பயக்கின்றன.

❋

தையற்கலை (பெண்கள் உடைகள்)

[ஆசிரியர் : கே. பி. சுந்தரம். பக். 160. விலை : ரூ. 2—0—0. கிடைக்குமிடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.]

தையற்கலை, வீட்டில் ஓய்வுநேரம் கிடைக்கக்கூடிய மகளிர்க்கு இன்பமும் பயனும் தரத்தக்க உயரிய பொழுதுபோக்குக் கலையாகும். தையற்கலையில் தேர்ச்சிப்பெறுதல் வேண்டும் என்ற ஆவல், பெரும்பாலான பெண்களுக்கு, இதுநாளில் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆவலை எளிதில் நிறைவேற்றிவைக்கக்கூடிய வாய்ப்பினை, இந்த நூலை எழுதியதன் மூலம் தோழர் கே. பி. சுந்தரம் ஏற்படுத்தித் தந்துள்ளார். முயற்சி இதுவரையில் தமிழகத்தில் யாரும் செய்யாத முயற்சி—நல்ல முயற்சி. தோழர் கே. பி. சுந்தரம் அவர்கள் தையற்கலையில் படித்துப் பட்டம்பெற்று, நல்ல பயிற்சியும் பழக்கமும் பூண்டவர். அறிஞர் அண்ணா அவர்கள் இதற்கு மதிப்புரை எழுதியுள்ளார்கள். பெண்களுக்கும், தையற்காரர்க்கும் பெரிதும் பயன்படக்கூடிய நூல். திருமணப்பரிசுக்கு ஏற்ற நூல்.

❋

வீணை

[ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன். பக்: 232. விலை : ரூ. 2—8—0. கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.]

வாழ்க்கைச் சுழலில் சிக்கித் தவிக்கும் ஒரு பெண்ணின் மனக்குழப்பங்களையும், சூழ்நிலைகளையும் கருப்பொருளாகக்கொண்டு, எழிலோவியக் கதையாகத் தோழர் இராதாமணாளன் அவர்களால் தீட்டிக்காட்டப்பட்டிருப்பதே இந்நூல். படிப்போர் உள்ளத்தைத் தொடும் கருத்துக்கள் நூல் எங்கணும் மிளிர்கின்றன. தோழர் இராதாமணாளன் அவர்களின் எழுத்துநடை, நயப்பாடு நிறைந்து, அழகும் இனிமையும் கொஞ்சும் தன்மையதாக விளங்கும் என்பதைப் பலரும் அறிவர். இந்நூல் படிக்கப்படிக்க இன்பச்சுவை பயப்பதாக அமைந்திருக்கிறது. புதுவாழ்வுப் பதிப்பகத்தார் நல்ல முறையில் நூலைப் பதிப்பித்துள்ளார்கள்.

❋

அறிவுத்திரள்

[ஆசிரியர் : எஸ். குமரேசன். பக் : 211. விலை: குறிக்கப்படவில்லை. கிடைக்குமிடம்: நேஷனல் புக்ஸ்டோர், 114, திண்டுக்கல் ரோடு, மதுரை.]

இந்நூலில் உலக அறிஞர்கள் பலரின் பொன்மொழிகள் ஒன்றாகத் திரட்டித்தரப்பட்டுள்ளன. அதனால்தான் இது அறிவுத்திரள் என்று பெயர்பெற்றிருக்கிறது.

76077

அறிவுப்புதிர் : விளக்கம்

சரியானவை : **1, 3.** தவறானவை : **2.**

1. சூரியனுக்கும் பூமிக்கும் இடையேயுள்ள தூரம் சுமார் 93 கோடி மைல்களாகும். ஒளி விநாடிக்கு 1,83,600 மைல் வேகத்தில் பரவுகிறது. சூரியனிடமிருந்து பூமிக்கு ஒளிவந்து சேருவதற்குச் சுமார் $8\frac{1}{2}$ நிமிடங்கள் ஆகின்றது. நாம் சூரியனைப் பார்க்கிறோம் என்றால் நாம் பார்ப்பதற்கு $8\frac{1}{2}$ நிமிடங்களுக்கு முன்பு சூரியனிடமிருந்து புறப்பட்ட ஒளிக்கதிர்களைக் காண்கிறோம். ஆகவே, நாம் பார்க்கும் நேரத்தில் நாம் காணும் சூரியன் உள்ள இடம் $8\frac{1}{2}$ நிமிடங்களுக்கு முன் இருந்த இடமாகும். உண்மையில் சூரியன் நாம் காணும் நேரத்தில் நாம் பார்க்கும் இடத்திற்கு மேற்காகச் சுமார் 2·8 டிகிரி கோணத்தில் இருக்கும்.

2. காற்றில் கரியமிலவாயு மிகமிகக் குறைந்த அளவில்தான் கலந்திருக்கிறது. நாம் வெளியிடும் கரியமிலவாயும், மரம், கரி முதலிய பொருள்கள் எரியும்போது வெளியேறிடும் கரியமிலவாயும் காற்றோடு கலக்கத்தான் செய்கின்றன. என்றாலும், காற்றில் கரியமிலவாயுவின் அளவு அதிகரித்துவிடுவதில்லை. ஏனெனில் மரம், செடி, கொடி முதலிய தாவர வகைகள் யாவும் காற்றிலிருக்கும் கரியமிலவாயுவை இழுத்துக்கொள்கின்றன. தாவர வகைகள் காற்றிலிருக்கும் கரியமிலவாயுவையும், நிலத்திலிருந்து நீரையும் உட்கொண்டு சூரிய வெளிச்சத்தின் உதவியால் உணவுப்பொருள்களை உற்பத்தியாக்குகின்றன.

3. நீர்க்கோர்வை எல்லோருக்கும் சாதாரணமாக ஏற்படுவதைக் காண்கிறோம். அது ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றிச் சரியான முடிவுகள் கொள்ளமுடியவில்லையென்றாலும் மருத்துவ அறிஞர்கள் நீர்க்கோர்வை ஒரு தொத்துநோய் என்பதை ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள். நீர்க்கோர்வையால் பாதிக்கப்பட்டவர்கள் தும்மலின்போதும் இருமலின்போதும் கைக்குட்டையைப் பயன்படுத்தவேண்டுமென வற்புறுத்துகிறார்கள். தும்மலின்போதும், இருமலின்போதும் கிருமிகள் பல அடிதூரம்வரை சிதறிச்சென்று நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவ வகை ஏற்பட்டுவிடுகிறது.

Regd. No. M 6296

MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுவத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்"

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர் ஒன்று

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.